Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JUNE 20, 2023

செவ்வாய்க்கிழமை ஜூன் 20, 2023 | ஒளி: 09 கதிர்: 022 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



### சின்னத் தேர்தலுக்கான

## கட்டுப்பணத்தை திருப்பி கொடுக்கவும்

உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் செலுத்திய கட்டுப் பணத்தை திரும்ப வழங்குமாறும் அந்த நிதியைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானது என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P12

### சர்வதேச நாணய நிதியத்தின்

# 3 உறுதி மொழிகளை நிறைவேற்றவில்லை

சர்வதேச நாணய நிதிய (ஐஎம்எப்) திட்டத்தின் கீழ் கண்காணிக்கக்கூடிய 100 உறுதிமொழிகளில் 29ஐ இலங்கை பூர்த்தி செய்துள்ளதுடன், 2023 மே மாத இறுதிக்குள் அவற்றின் மூன்று உறுதிமொழிகளை நிறைவேற்ற தவறியுள்ளதாக வெரிடே ரிசர்ச்சின் 'ஐஎம்எப் கணிப்பான்' எனும் கருவி தெரிவித்துள்ளது.



நிறைவேற்றத் தவறியுள்ள இரண்டு உறுதிமொழிகள் வருமானம் தொடர்பானவை. முதலாவதாக, வரி வருவாயை 2023 மார்ச் மாதத்துக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.1% அல்லது 650 பில்லியன் ரூபாயாக உயர்த்த வேண்டும் என்பதாகும். ஆனால், 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அரசாங்கத்தின் மொத்த வரி வருமானம் 578 பில்லியன் ரூபாயாக மாத்திரமே அமைந்திருந்தது.

இரண்டாவதாக, மே மாதம் 30ஆம் திகதியன்று பிரகடன படுத்தப்பட்ட வரி முன்மொழிவின் அடிப்படையில் பந்தயம் மற்றும் சூதாட்ட வரி தொடர்பான வரி விகிதங்களை அதிகரிப்பதாகும். சூதாட்டத்துக்கான வருடாந்த வரியை ரூ.500 மில்லியனாகவும், முகவர்கள் மூலம் பந்தயம் கட்டுவதற்கான வருடாந்த வரி ரூ.5 மில்லியனாகவும், நேரடி ஒளிபரப்பு மூலம் பந்தயம் கட்டுவதற்கான வருடாந்த வரி ரூ. 75,000, மற்றும் மொத்த வசூல் மீதான வரி 15% ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 4 ஆம் திகதி முன்வரைவு சட்டம் பிரகடன படுத்தப்பட்டாலும், முன்வரைவு சட்டத்துக்கு எந்த திருத்தமும் சமர்ப்பிக்கப்படவில்லை. மே மாத இறுதிக்குள், நிகழ்நிலையில் நிதி வெளிப்படைத்தன்மையை காட்டும் வகையிலான தளத்தை அமைப்பதற்கான உறுதிமொழி பகுதியளவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P12

## 20 ரூபாயால் 'அதிர்ஷ்டம்' அதிகரிப்பு



அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் விலையை 40 ரூபாயாக உயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அடுத்த மாதம் முதல் இந்த விலை அதிகரிப்பு அமலுக்கு வரவுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த நிலையில், அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விநியோகஸ்தர்களின் தரகு பணத்தினை அதிகரிப்பதற்கு இணக்கம் வெளியிடப்படவில்லை என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை லொத்தர் விநியோகஸ்தர்கள் சங்கம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இதையடுத்து, தரகு பணத்தை அதிகரிக்காவிட்டால், எதிர்வரும் ஜூலை ஏழாம் திகதி முதல் லொத்தர் விற்பனையில் இருந்து விலகவுள்ளதாக அந்த சங்கத்தின் பொது செயலாளர் பி. எஸ். எஸ். மாரசிங்க கூறியுள்ளார்.

## விமலுக்கு பிடிவிறாந்து



வழக்கு தவணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகாத முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவை கைது செய்து மன்றில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், கறுவாத் தோட்டம் பொலிஸாருக்கு திங்கட்கிழமை (19) கட்டளையிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் ஷெய்ட் ராட் அல் ஹுசைனின் இலங்கை விஜயத்தை எதிர்த்து, 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி, கொழும்பு - 07, பௌத்தாலோக மாவத்தையிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்துக்கு முன்னால், விமல் எம்.பி உட்பட குழுவினரால், போராட்டம் நடத்தப்பட்டது.

தொடர்ச்சி P12




### மக்களின் விருப்பம் மாறியுள்ளதால்

## தேர்தலுக்கான தேவை ஏற்பட்டுள்ளது

### தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

அண்மைக் காலமாக இடம்பெற்ற சம்பவங்களின் பின்னர், மக்களின் விருப்பத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தற்போது தேர்தல் ஒன்றுக்கான தேவை எழுந்துள்ளதாகவும் தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

தொடர்ச்சி P12

# விசேட நுகர்வு பொருளாக கோதுமைமா பெயரீடு

### பாண் விலை 10 ரூபாய் குறையும் என்கிறார் நளின்

விசேட நுகர்வு பொருளாக கோதுமை மா பெயரிடப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், பாண் மற்றும் சிற்றுண்டி உணவுப் பொருட்களின் விலைகளை 10 ரூபாயால் குறைப்பதற்கு அறிவுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். 430 ரூபாய்க்கு



விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 160 முதல் 170 ரூபாய் வரை விற்கப்படுவதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வை தடுக்க கோதுமை மாவை அத்தியாவசியப் பொருளாக பிரகடனப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார். கோதுமை மாவின் விலை மீண்டும் அதிகரிக்கப்படாது என்ற உத்தரவாதத்தின் பேரில் பேக்கரி பொருட்களின் விலைகளை குறைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P12

### டெங்குவில் இருந்து தப்பிக்க

## வெளிர் நிற நீள ஆடை அணிய அனுமதி

டெங்கு நுளம்புகளிடம் இருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாக்கும் நோக்கில் மேல் மாகாண பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் வெளிர் நிறமான நீளமான ஆடையை அணிவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.




திங்கட்கிழமை (19) முதல் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண கல்விப் பணியகம் அறிவித்துள்ளது. இதேவேளை, நாட்டின் ஏனைய மாகாணங்களிலுள்ள பாடசாலைகளிலும் இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு டெங்கு மற்றும் கொரோனா தடுப்புக்காக நியமிக்கப்பட்ட விசேட நிபுணர் குழுவால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் 300ஐ விட குறைந்தது டொலர்

இலங்கை மத்திய வங்கியால் திங்கட்கிழமை (19) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மீண்டும் வலுப்பெற்றுள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 297 ரூபாய் 53 சதமாகவும் விற்பனை விலை 315 ரூபாய் 12 சதமாகவும் பதிவாகியிருந்தது.

தொடர்ச்சி P12



## இந்திய நீர்மூழ்கி 'வாஹிர்' கொழும்புக்கு விஜயம்

'பூகோள சமுத்திர வலயம்' என்ற தொனிப்பொருளின்கீழ் முன்னெடுக்கப்படும் சர்வதேச யோகா தினத்தின் 9ஆவது பதிப்பினை அனுஷ்டிக்கும் முகமாக இந்திய கடற்படையின் நவீன தயாரிப்பான கல்வாரி வகை நீர்மூழ்கி கப்பலான 'வாஹிர்' கொழும்புக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

தொடர்ச்சி P12



## போதியளவு யூரியா கையிருப்பில் உள்ளது

நாடு முழுவதிலும் உள்ள கமநல சேவை நிலையங்களில் போதுமான அளவு யூரியா உரம் கையிருப்பில் உள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட சில பிரதேசங்களுக்கு உர இருப்புகள் கிடைக்கவில்லை என்ற கூற்றுக்கு பதிலளிக்கும் வகையில், அமைச்சு விரிவான விளக்கமொன்றை வெளியிட்டுள்ளது.

நாடு முழுவதிலு

தொடர்ச்சி P12

# ரணில் செல்ல முன் மோடிக்கு கடிதம்

■ க. அகரன்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய பிரதமர் நரேந்திர மோடியை எதிர்வரும் 21ஆம் திகதி சந்திக்கவுள்ள நிலையில், அந்தச் சந்திப்புக்கு முன்னர், தமிழர் பிரச்சினையை தீர்க்க அழுத்தம் கொடுக்க வேண்டி, இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்ப வேண்டும் என்று தமிழ் தேசிய கூட்டணியின் நிறைவேற்று குழுவில் தீர்மானம் எட்டப்பட்டதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

பத்மநாபாவின் 33 ஆவது நினைவுதினம் வவுனியா நகர மத்தியில் உள்ள அவரது சிலைக்கு முன்னால் திங்கட்கிழமை (19) இடம்பெற்றதன் பின்னர், ஈ.பி.ஆர்.எல்.எப் வவுனியா அலுவலகத்தில் நடைபெற்ற அஞ்சலி உரையின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,



"யுத்தம் முடிந்து 14 ஆண்டுகளில் தமிழ் மக்கள், தீர்வொன்றினையோ அல்லது போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஏனைய பிரச்சினைகளோ தீர்க்கமுடியாத நிலையிலேயே உள்ளனர்.

தொடர்ச்சி P12

## வழக்கு ஒத்திவைப்பு

கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் பிரதான நுழைவாயிலை மறித்ததாக பிரபல கலைஞர் தமிதா அபேரத்ன, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் இளைஞர் செயற்பாட்டாளர் ரதிந்து சேனாரத்ன உள்ளிட்ட

தொடர்ச்சி P12

# கொழும்பில் 'திப்பு சுல்தான்'



சீனாவிலிருந்து பாகிஸ்தான் நோக்கிச் செல்லும் பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் 'திப்பு சுல்தான்' அதனது ஆரம்பப் பயணத்தில் 3 நாள்கள் நல்லெண்ண விஜயமாக ஞாயிற்றுக்கிழமை (18) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

'திப்பு சுல்தான்' கப்பலானது சீனாவின் Hudong Zhonghua Shipbuilding நிறுவனத்தால் கட்டப்பட்ட போர்க் கப்பலாகும்.

2023 மே 10ஆம் திகதி அன்று சீனாவின் ஷாங்காய் நகரில் பாகிஸ்தான் கடற்படையால் கப்பல் பொறுப்பேற்கப்பட்டதுடன் அதன் முதல் கட்டளை அதிகாரியாக கேப்டன் ஜவாத் ஹுசைன் பொறுப்பேற்றார்.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த 'திப்பு சுல்தான்' கப்பலுக்கு இலங்கை கடற்படையினரால் வரவேற்பு அளிக்கப்பட்டது. இலங்கையில் தங்கியிருக்கும் நாள்களில், கப்பலின் கட்டளை அதிகாரி , இலங்கை கடற்படையின் மூத்த கடற்படை அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடுவார்.

தொடர்ச்சி P12

## ரோஹித்தவுக்கு புதிய நியமனம்



முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம, பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் அமலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் தொடர்பில், ஜனாதிபதி செயலகத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ரோஹித்த போகொல்லாகம இதற்கு முன்னர் கிழக்கு மாகாண ஆளுநராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## கட்டுப்பணத்தை திருப்பி கொடுக்கவும்

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு செலுத்திய கட்டுப்பணத்தை அரசாங்கம் பயன்படுத்துவதை தாம் காண்பதாகவும் இது சட்டவிரோதமானது என்றும் தெரிவித்த அவர், இந்தப் பணத்தை வேட்பாளர்களிடம் திருப்பித் தருமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், உள்நாட்டு கடனைச் செலுத்துவதை அரசாங்கம் தாமதிக்க வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பில் மெதுவாக செல்ல வேண்டும் எனவும் அவசர முடிவுகள் வங்கிகள் கவலைப்படும் பாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தும் என்றார்.

தேர்தலுக்கான தங்கள் கோரிக்கையைத் தொடர்வோம் என்றும் தேர்தலை நடத்தவும், மக்களிடமிருந்து புதிய ஆணையைப் பெறவும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்போம் என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.க்கள் குழுவொன்று ஜனாதிபதியின் சமிக்ஞைக்காக காத்திருப்பதாகக் கூறப்படும் செய்தி தொடர்பில் தெரிவித்த அவர், தனிநபர்கள் பக்கம் மாறினாலும் அடிமட்டத்தில் உள்ள கட்சி ஆதரவாளர்கள் கட்சியுடன் இருப்பதாக குறிப்பிட்டார்.

## தேர்தலுக்கான தேவை ஏற்பட்டுள்ளது

அதற்கமைய, தமது பிரதிநிதிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் எழுந்துள்ள புதிய விருப்பத்திற்கு அமைய, ஏதேனுமொரு தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றார்.

அவ்வாறு செயற்படவில்லையாயின், சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளமுடியாத வகையில் மக்களின் விருப்பங்கள் கொந்தளிப்பதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு தற்போது வழமைக்கு திரும்ப ஆரம்பித்துள்ள நிலையில், தேர்தலுக்கான தேவை காணப்படுமாயின் அதற்கான நிதியை பாராளுமன்றத்தின் ஊடாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலுக்கு தயாராகவுள்ளதாகவும் அதற்கு தேவையான ஆரம்பக்கட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதிகாரிகளை பயிற்றுவித்தல், வாக்களிப்பு நிலையங்களை தயாரித்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் தற்போது நிறைவடைந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், அடுத்த தேர்தலின் போது வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படுவமாயின் அதற்காக செலவு செய்யும் பணம் வீணாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## போதியளவு யூரியா கையிருப்பில் உள்ளது

நாடு முழுவதிலும் உள்ள கமநல சேவை நிலையங்களில் தற்போதுள்ள கையிருப்புகளுக்கு மேலதிகமாக கடந்த வாரத்தில் மொத்தம் 5,100 மெற்றிக் தொன் யூரியா உரம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் 1,000 மெற்றிக் தொன் டன் யூரியா உரமும் கமநல சேவை மையங்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளது என்றும் எந்தவொரு கமநல சேவை நிலையங்களிலும் யூரியா உரம் கையிருப்பு இல்லை என்றால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உர நிறுவனங்களை உடனடியாக தொடர்பு கொள்ள வேண்டும் என விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

077 551 0674 என்ற இலக்கத்தின் ஊடாக கொழும்பு வர்த்தக உர நிறுவனத்தின் விற்பனை முகாமையாளரை அல்லது 077 444 1417 ஊடாக இலங்கை உரக் கம்பனியின் விநியோக முகாமையாளரை தொடர்பு கொள்ள வேண்டும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

### சர்வதேச நாணய நிதியத்தின்

# 3 உறுதி மொழிகளை நிறைவேற்றவில்லை

குறிப்பிடத்தக்க பொதுக் கொள்முதல் ஒப்பந்தங்கள், முதலீட்டுச் சபையால் வழங்கப்பட்ட வரி விலக்களிப்புகளால் பயனடையும் நிறுவனங்களின் பெயர் பட்டியல் மற்றும் சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக வரி விலக்களிப்புகளுக்கு உட்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் பற்றிய தகவல்களை வெளியிடுவதே இந்த தளத்தின் நோக்கமாகும். இத் தகவல்களை அரையாண்டு அடிப்படையில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்களுடன் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்ட புதிய மத்திய வங்கிச் சட்டத்திற்கு பாராளுமன்ற அங்கீகாரம் வழங்குவது நிறைவேற்றப்படாத மூன்றாவது உறுதிமொழியாகும். மார்ச் 7ம் திகதி முன்வரைவுச் சட்டம் வெளியிடப்பட்டாலும், சட்டத்திற்கு எவ்வித திருத்தமும் செய்யப்படவில்லை.

மே மாத இறுதியில், கணிப்பான் மூலமாக அடையாளம் காணப்பட்ட ஆறு உறுதிமொழிகளின் முன்னேற்ற நிலை தெரியவில்லை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த உறுதிமொழிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு தேவையான தகவல்கள் கிடைக்கவில்லை என்பதை இது காட்டுகிறது. மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுடன் ஒப்பிடுகையில் சில முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும், தரவுகள் இல்லாதது கவலையளிக்கக் கூடியதாகும்.

2023 மார்ச் 20 அன்று அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக சர்வதேச நாணய நிதியத்திற்கான இலங்கையின் உள்நோக்கக் கடிதத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள 100 அடையாளம் காணப்பட்ட உறுதிமொழிகளை முறையாகக் கண்காணிக்கும் இலங்கையின் முதல் மற்றும் ஒரே தளம் 'IMF கணிப்பான்' ஆகும்.

இத்தளம், அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதியம், தங்களது உறுதிமொழிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நன்கு புரிந்துகொண்டு அவற்றை கண்காணிப்பதற்கு உதவும் வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

## விசேட நுகர்வு பொருளாக கோதுமைமா பெயரீடு

கோழி இறைச்சி விலை உயர்வைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டதாகவும், நுகர்வோர் விவகார அதிகாரசபை இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில், கோதுமை மா, மக்களுக்கு இன்றியமையாதது என்பதனால் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் வினவியதன் பின்னர் இவ்வாறு விசேட நுகர்வுப் பொருளாக கோதுமை மா பெயரிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மீண்டும் 300ஐ விட குறைந்தது டொலர்

கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலரின் விற்பனை விலை 319 ரூபாய் 66 சதமாக பதிவாகியிருந்ததுடன், புதன்கிழமை (14) வெளியான மாற்று விகிதங்களின் படி டொலர் 300 ரூபாயை விட அதிகரித்திருந்தது.

கடந்த மேமாதம் 18ஆம் திகதி 300 ரூபாயை விட குறைந்திருந்த இலங்கை ரூபாய் மீண்டும் 300ஐ தாண்டிய நிலையின் மீண்டும் நேற்றையதினம் 300ஐ விட குறைந்துள்ளது.

## ரணில் செல்ல முன் மோடிக்கு கடிதம்

இதற்கு அப்பால் ஒரு சில கட்சிகளை தவிர ஏனைய தமிழ் தேசிய கட்சிகள் மீண்டும் இந்தியாவை நாடி இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியா இல்லாமல் இந்த பிரச்சனையை தீர்க்கமுடியாது என சொல்லியே நாடியிருக்கின்றது.

இந்திய பிரதமர் ஈழத்தமிழர்களின் பிரச்சனைக்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது. ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிர்வாகம் நேற்று (முன்தினம்) கூடியபோது முக்கியமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதாவது, 21 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி இந்திய பிரதமரை சந்திக்க உள்ளார். இந்த சந்திப்பில் ஈழத் தமிழர்களின் பிரச்சனைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை காணவேண்டும். அதற்குமப்பால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் உள்ள 13 ஆவது திருத்த சட்டத்தின் பிரகாரம் மாகாணசபைக்குள்ள முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். போரினால் ஏற்பட்ட பல்வேறு பிரச்சனைகளான நில ஆக்கிரமிப்பு, பௌத்த மயமாக்கல் போன்ற பல பிரச்சனைகளுக்கு இந்திய பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தத்தை பிரயோகித்து பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஏனைய தமிழ் தேசிய பரப்பில் உள்ள கட்சிகளும் இணைந்து குறித்த சந்திப்புக்கு முன்னதாக இந்திய பிரதமருக்கு ஒரு கடிதத்தை கையெழுத்திட்டு அனுப்பவேண்டும் என்ற தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

## கொழும்பில் "திப்பு சுல்தான்"

மேலும், இரு கடற்படைகளுக்கும் இடையில் பரஸ்பர செயற்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு கொழும்பில் இருந்து புறப்படும் தினத்தில் (20) இலங்கை கடற்படையுடன் பயிற்சி நடவடிக்கையும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட

# கிழக்கு விவசாயிகளுக்கு ஆளுநர் செந்தில் தீர்வு



கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கமதொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் உரப்பற்றாக்குறையால் தமது விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு உரிய தீர்வை பெற்றுத்தருமாறும் கிழக்கு மாகாண ஆளுநரிடம் மூன்று மாவட்ட விவசாயிகளும் கோரிக்கை முன்வைத்தனர். விவசாயிகள் முவைத்த கோரிக்கைக்கு அமைவாக,விரைவாக உரிய தீர்வு பெற்றுத்தரப்படுமென விவசாயிகளுக்கு வாக்குறுதியளித்திருந்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கவனத்துக்கு இந்த விடயத்தை கொண்டுசென்றதுடன் உரப் பற்றாக்குறைக்கு தீர்வையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

அதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு போதிய உரத்தை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சு ஆரம்பித்துள்ளதுடன், பல காலமாக நிலுவையில் இருந்த பிரச்சினைக்கு கிழக்கு மாகாண ஆளுநரால் உடனடி தீர்வு வழங்கப்பட்டது.

## இந்திய நீர்மூழ்கி வாஹிர் கொழும்புக்கு விஜயம்

ஜூன் 19ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை இடம்பெறும் இவ்விஜயத்தின் ஓர் அங்கமாக குறித்த இந்திய கடற்படை நீர்மூழ்கி கப்பலின் கட்டளைத் தளபதி திவாகர். எஸ் மேற்கு கடற் பிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சுரேஸ் டி சில்வா அவர்களை சந்திக்கவுள்ளார்.

அத்துடன் குறித்த நீர்மூழ்கி கப்பலை பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் பார்வையிட முடியுமென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்துடன் இணைந்து இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஒழுங்குசெய்துள்ள பாரிய நிகழ்வொன்றும் 2023 ஜூன் 21 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்திய மற்றும் இலங்கை கடற்படைகளின் உயரதிகாரிகள் மற்றும் சிரேஸ்ட பாதுகாப்பு அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர். உலகளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட துறைமுகங்களை இணைத்து "பூகோள சமுத்திர வளையம்" என்ற வலையமைமைப்பை நிறுவும் தனித்துவமிக்க முன்னெடுப்பாக நடைபெறும் இந்த யோகா அமர்வுகளில் இந்தியக் கடற்படையினர் பங்கேற்கின்றனர்,

அத்துடன் இந்தியாவின் ஜி20 தலைமைத்துவத்துக்கான தொனிப்பொருளான "வசுதைவ குடும்பகம்" அல்லது "ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்" ஆகியவற்றை எதிரொலிக்கும் வகையில் பொது ஆரோக்கியம் என்ற அடிப்படையில் உலகெங்கிலுமுள்ள மக்களை யோகா ஒன்றிணைக்கின்றது,

இதேபோல அண்மையிலும் இந்தியக் கடற்படைக் கப்பல்களான டில்லி, சுகன்யா, கில்தான் மற்றும் சாவித்ரி ஆகியவையும் இவ்வருட முற்பகுதியில் கொழும்பு மற்றும் திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததுடன் இலங்கை கடற்படையுடன் இணைந்து யோகா அமர்வுகளும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை நினைவில்கொள்ளத்தக்கது.

அண்மையில், 2023 ஜூனில், சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தால் இலங்கையின் ஐந்து நகரங்களில் மூன்று நாள் யோகா பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டதுடன் இதில் இலங்கை ஆயுதப் படையினர் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் கொள்கையான அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் 'பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பும் வளர்ச்சியும்' ஆகியவற்றின் அடிப்படையில் இரு அயல் நாடுகளினதும் கடற்படைகளுக்கு இடையே சகோதரத்துவத்தையும் ஒற்றுமையையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டே இந்திய கடற்படை கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கு விஜயங்களை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## வழக்கு ஒத்திவைப்பு

ஒன்பது அரகலய செயற்பாட்டாளர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை அடுத்த விசாரணையின் போது சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

கடந்த வருடம் மே 30 ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் பிரதான நுழைவாயிலை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டு, பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில், போராட்ட செயற்பாட்டாளர்களுக்கு எதிராக கொம்பனி வீதிப் பொலிஸார் இந்த முறைப்பாட்டை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## "முட்டாள்தனமான முடிவுகளை எடுக்காதீர்கள்"

தங்கள் சொந்த எண்ணங்களின் பிரகாரம் அவசரப்பட்டு சர்வதேச நாணய நிதியத்தால் சொல்லப்படுவதை ஒத்துக்கொள்ளும் சூழ்நிலையில்,நாட்டிற்கு நடந்த அழிவுகள் கண்ணெதிரே தெரிவதாகவும்,இப்போதாவது அவசர முடிவுகள் எடுக்காமல், எதிர்க்கட்சிகளுக்கு அனைத்து உண்மைகளையும் வெளிப்படுத்தி, எதிர்க்கட்சியும் அரசாங்கமும் ஒரே குரலில் தேசிய கடன் மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்க ஒன்றிணையுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் திங்கட்கிழமை (19) கூடிய எதிர்க்கட்சி ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

கட்சி நிறம்,மதம்,சாதி வேறுபாடின்றி பாராளுமன்றத்திலுள்ள 225 உறுப்பினர்களும் ஒரே குரலில் எதிர்ப்பை வெளிப்படுத்தும் பட்சத்தில்,சர்வதேச நாணய நிதியத்திற்குத் தெளிவான தாக்கத்தை ஏற்படுத்தினால் ஊழியர் சேம நிதியம்,ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை மற்றும் ஓய்வூதியம் உட்பட அனைவரின் வைப்புத் தொகைகளையும் பாதுகாக்க முடியும் என்றும்,சரியானதற்கு சரி என்று கூறினாலும் தவறானவற்றுக்கு உடன்படப்போவதில்லை எனவும்,பல்வேறு தந்திர மந்திரங்களில் சிக்கிக் கொள்ளாமல் தாம் எடுத்த முட்டாள்தனமான முடிவுகளைஅவ்வாறே ஒப்புக் கொண்டு,புதிய வழியில் முன்னோக்கிச் செல்ல ஒன்றுபடுமாறும்,இந்நாட்டு மக்களின் வைப்புத் தொகைகளின் பெறுமதியைப் பாதுகாக்கத் தயாராக இருந்தாலும் அரசாங்கம் சொல்வதெற்கெல்லாம் கை தூக்கத் தயாராக இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

புதுமாத்தளனில்

# புதையல் தோண்ட பூசை செய்தவர்கள் கைது

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட மூவரை முல்லைத்தீவு பொலிஸார் நேற்று (19) அதிகாலை கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது: புதுமாத்தளன் பகுதியில் புதையல் தோண்டுவதற்காக சாராயப்போத்தல்கள், பூசைக்குரிய பொருட்கள், மண்வெட்டி, சவள் என்பனவற்றை பயன்படுத்தி, புதையல் இருப்பதாக சந்தேகிக்கப்படும் இடத்தில் பூசை நடத்தி, புதையல் தோண்ட முற்பட்ட வேளை, முல்லைத்தீவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு பொலிஸார், புதையல் தோண்ட முற்பட்டவர்களை கைதுசெய்துள்ளதுடன் தோண்டுவதற்கு பயன்படுத்திய பொருட்களையும் கைப்பற்றியுள்ளார்கள்.

சந்தேக நபர்களையும் சான்று பொருட்களையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள்.

# குழந்தை வரத்துக்கு வசீகரம் செய்தவரும் காதலியும் கைது

குழந்தை வரத்தை எதிர்பார்த்து வசீகரம் செய்தபோது, பெண்ணொருவர் மரணமடைந்த சம்பவத்தை அடுத்து, வசீகரம் செய்த பூசாரியும் அவருடைய காதலியும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

லக்கல பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களான இவ்விருவரும் நாவுல பதில் நீதவான ஷாமலி விஜேரத்னவின் உத்தரவுக்கு அமைய எதிர்வரும் 27ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். குழந்தை வரம் கேட்டு செய்யப்பட்ட வசீகர பூஜையில் 48 வயதான பெண் மரணமடைந்தார். அந்த வசீகர பூஜையில் 21 இளநீர் பருகக் கொடுத்ததுடன், மஞ்சள் தூளையும் கலக்கி பருகக் கொடுத்துள்ளனர்.

அப்போது அப்பெண் திடீரென சுகவீனமடைந்துள்ளார். அதன்பின்னர் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார். இதையடுத்தே வசீகரம் செய்த பூசாரியும் அவருடைய காதலியும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



‘குருதி படிந்த நிலம்’ கவிதை தொகுப்பு நூல்

# புலனாய்வாளர்கள் நூலாசிரியரிடம் விசாரணை

■ செ. கீதாஞ்சன்

கவிஞர் சோமையா சுதர்சனின் ‘குருதி படிந்த நிலம்’ கவிதைத்தொகுப்பு நூல் ஞாயிற்றுக்கிழமை (18) புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில், ஆசிரியர் பே. யதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் எஸ். நோகராதலிங்கம், சிறப்பு விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ். ஜெயகாந், கௌரவ விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி பணிப்பாளர் சி. பாஸ்கரன், முன்னாள் உதவிக் கல்வி பணிப்பாளர் சி. பீதாம்பரம், மன்னார் வலய கல்வி அலுவலகஉதவி கல்வி பணிப்பாளர் க. மனோரஞ்சன், உடையார் கட்டு மகா வித்தியாலய அதிபர் வி. ஸ்ரீதரன், சுதந்திரபுரம் தமிழ் வித்தியாலய அதிபர் செ. மேகநாதன், நட்டுவாங்க ஆசான் ஆசிரியர் ந. குமரவேல், ஆசிரியர் இராஜினி ஜோதிலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

‘குருதி படிந்த நிலம் கவிதை நூல் நயப்புரை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை மேனாள் உதவி விரிவுரையாளர் முருகையா சதீஸ் நிகழ்த்த, ஏற்புரையை நூலாசிரியர் சோமையா சுதர்சன் நிகழ்த்தியதை தொடர்ந்து, நூலை பாராளுமன்ற உறுப்பினர் எஸ். நோகராதலிங்கம் வெளியிட்டு வைத்தார்.

இதன்போது, ‘குருதி படிந்த நிலம்’ புத்தகத்தின் உள்ளடக்கம் தொடர்பில் தொலைபேசியில் தொடர்புகொண்ட புலனாய்வாளர்கள், அரசாங்கத்துக்கு எதிராக கவிதை நூலாக இருக்குமோ என்ற பார்வையில், நூலாசிரியரிடம் பல கேள்விகளை கேட்டதாகவும் அறியமுடிகின்றது.

# கட்டாக்காலி எருமைகளை இறைச்சியாக்கும் கும்பல்

■ பி.கேதீஸ்



கொத்மலை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பல கிராமங்களில் சுற்றித்திரியும் எருமை மாடுகளை, இனந்தெரியாதோர் கொன்று இறைச்சிக்காக எடுத்துச் செல்வதாக கொத்மலையின் பல கிராமங்களைச் சேர்ந்த கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொத்மலை, கடதொர, ரன்மல்ஹா பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (18) இரவு பெரிய எருமை மாடொன்றை கொன்று, அதன் தலையை வீதியில் விட்டுவிட்டு எஞ்சிய பாகங்களை இறைச்சிக்காக சிலர் எடுத்துச் சென்றுள்ளனர்.

கொத்மலையை சூழவுள்ள கிராமங்களில் அதிகளவான எருமைகள் சுற்றித் திரிவதாகவும், இவற்றில் பெரும்பாலான விலங்குகள் மக்களால் கைவிடப்பட்டமையால் தற்போது கட்டாக்காலி எருமைகளாக மாறியுள்ளதாகவும் மலையக சுற்றாடல் அமைப்புகள் தெரிவிக்கின்றன.

வனப் பகுதிகளை அண்மித்து வாழும் மக்கள் சிலர், கட்டாக்காலி எருமைகளையும் மாடுகளையும் இறைச்சிக்காக வேட்டையாடி வருகின்றனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி கட்டாக்காலி எருமை மாடுகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மட்டு. மயிலத்தமடு மேச்சல் தரையில்

# கன்றுத்தாச்சி மாட்டை இறைச்சிக்காக வெட்டிய கொடுமை

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு - பொலன்னறுவை எல்லைபகுதியில் உள்ள மயிலத்தமடு, மாதவனை கால்நடை மேச்சல் பகுதியில் கன்றுத்தாச்சி மாட்டை இறைச்சிக்காக வெட்டி உள்ளதாகவும் இப்பகுதியில் கால்நடைகளை திட்டமிட்டு தொடர்ச்சியாகக் கொன்றுவருவதாகவும் கால்நடை வளர்ப்பாளர்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டம், கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இந்த மேச்சல் தரை பகுதி ஊடாக, மாகாவலி திட்டம் செயற்பட்டு வருவதால், மேச்சல் தரை காணியை சிங்களவர்கள் அத்துமீறி அபகரித்துவரும் சர்ச்சை தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றது.

இந்த நிலையில், அந்த மேச்சல் தரை காணிகளை அபகரிக்கும் விதத்தில் செயற்பட்டுவரும் சிங்களவர்கள், மேச்சல் தரை பகுதிகளில் இருந்து கால்நடைகளைக் கலைப்பதற்காக, மாடுகளை இறைச்சிக்காக துப்பாக்கியால் சுட்டும், வெட்டியும் வருவதாகவும் கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இவ்வாறான நிலையில், கன்றுத்தாச்சி மாடு இறைச்சிக்காக வெட்டப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, தேசிய பால் உற்பத்திக்கு அதிகமான பங்களிப்பை வழங்கிவரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் இச்செயற்பாடானது கால்நடைகளுக்கு பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்தி உள்ளதுடன் இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கண்டுபிடித்து, சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன் ஜனாதிபதி, கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரும் இதில் தலையிட்டு, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முதுகில் வரிக்காயங்களுடன் ஹட்டனில் சிறுவன் மீட்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ



தாய், தந்தையால் கடுமையான தாக்குதலுக்கு உள்ளான சிறுவன், வீட்டிலிருந்து தப்பியோடிய நிலையில், ஹட்டன் ரயில் நிலையத்தில் வைத்து ஹட்டன் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பின் கீழிருக்கும் 15 வயதான சிறுவன், திங்கட்கிழமை (19) அதிகாலையில் மீட்கப்பட்டான்.

அநுராதபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டு மொஹமட் அம்பர் என்ற சிறுவனே இவ்வாறு மீட்கப்பட்டார். மாணவனான இச்சிறுவன், கோட்டையில் இருந்து பதுளை நோக்கி பயணித்த இரவு தபால் ரயிலில் பயணித்துள்ளான். எனினும், ஹட்டன் ரயில் நிலையத்தில் இறங்கி, ரயில் நிலையத்தில் தன்னந்தனியாக இருந்துள்ளார். இதுதொடர்பில் ஹட்டன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்தே, விரைந்து செயற்பட்ட பொலிஸார் சிறுவனை மீட்டுள்ளனர். தன்னுடைய பெற்றோர் அநுராதபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்று தெரிவித்துள்ள சிறுவன், தன்னுடைய குடும்பத்தில் தனக்கு அக்காவும் அண்ணனும் இருக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளான்.

எனினும், பாணந்துறையில் உள்ள பாட்டியின் வீட்டில் தங்கியிருந்து 10 ஆம் வகுப்பு வரையிலும் கல்விக்கற்றதாகவும், எனினும் பாடசாலையில் இருந்து தன்னை விலக்கிக்கொண்டனர் என்றும் அச்சிறுவன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இருந்து பாணத்துறைக்கு வந்த தன்னுடைய தந்தையும் தாயும் வீட்டுக்குப் போவோமென பலவந்தப்படுத்தினர். அதற்கு மறுப்புத் தெரிவிக்கவே, இவ்வாறு கடுமையான முறையில் தாக்குதல் நடத்தியதாகவும் தன்னை கட்டிவைத்து தந்தை இடுப்பு பட்டியால் தாக்கியதாகவும் அச்சிறுவன் தெரிவித்துள்ளான்.

தாய், தந்தையின் துன்புறுத்தலால், மீண்டும் வீட்டுக்குச் செல்லமுடியாது என்றும் அச்சிறுவன் தெரிவித்துள்ளான்.

சிறுவனின் உடம்பில் காயங்கள் உள்ளமையால், அச்சிறுவனை டிக்கோயா- கிளங்கன் வைத்திசாலையில் பரிசோதனைக்கு உட்படுத்தி, நீதிமன்ற வைத்தியரின் அறிக்கையுடன் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சிறுவனின் பாதுகாவலர்களை ஹட்டன் பொலிஸ் நிலையத்துக்கு வருகைதருமாறும் ஹட்டன் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கல்முனை மஹ்மூத் கல்லூரி மாணவி

# தேசிய ரீதியில் சாதனை

■ அஸ்ஹர் இப்றாஹிம்

மென்பொருள் சேவை நிறுவனங்களுக்கான இலங்கை சங்கத்தால் (Sri Lanka Association for Software Services Companies) 2023ஆம் ஆண்டுக்கான தேசிய புத்தாக்க சிந்தனைகளுக்கான விருதுகளில், தொழில்நுட்ப சிறார்கள் (ITech Kids) பிரிவில், மென்பொருள் உருவாக்கத்துக்காக நடைபெற்ற போட்டியில், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி ஸஹ்றா நதா, தேசிய ரீதியில் வெற்றி பெற்ற ஐந்து சாதனையாளர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு உள்ளார்.

கொழும்பு சங்கரில்லா ஹோட்டலில் வெள்ளிக்கிழமை (16) நடைபெற்ற புத்தாக்க சிந்தனைகளுக்கான தேசிய விருதுகள் வழங்கும் நிகழ்வில், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் சாய்ந்தமருதைச் சேர்ந்த ஸஹ்றா நதாவால் முன்மொழியப்பட்ட சிறுவர்களுக்கான SDG கற்றல் தொடர்பான மொபைல் பயன்பாட்டு மென்பொருள் செயலிக்காக (SDG Learning Mobile App for Children) இவ்விருதைப் பெற்றுக்கொண்டார்.



இவ்விருது வழங்கும் நிகழ்வில் கௌரவ அதிதியாக கலந்து கொண்ட நோர்வேயின் தூதுவர் டிரினி ஜோர்னலி எஸ்கடேலியால் இவ்விருது ஸஹ்றா நதாவாலுக்கு வழங்கப்பட்டது.

இவர் தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜா மற்றும் அஸ்ரப் ஹஸ்னா செரீபின் ஆகியோரின் மூத்த புதல்வியாவார்.

# ஹைபொரஸ்ட் தோட்டத்தின் 10 நாள் பணி பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தது

■ ஆ.ரமேஸ்



மத்துரட்ட பெருந்தோட்டம் பிரவுண்ஸ் கம்பனி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஹைபொரஸ்ட் தோட்டம் இரண்டு பிரிவுத் தொழிலாளர்களின் பணி பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தது.

தொழிலாளர்கள் கடந்த 9 ஆம் திகதி முதல் பத்து நாள்களாக தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவந்தனர்.

இந்நிலையில், நுவரெலியா மாவட்ட தொழில் திணைக்களத்தில் திங்கட்கிழமை (19) இடம்பெற்ற சுமூகமான பேச்சுவார்த்தையின் பின்னர் பணி பகிஷ்கரிப்பு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

நுவரெலியா மாவட்ட தொழில் உதவி ஆணையாளர் உப்பாலி வீரசிங்க முன்னிலையில் மாவட்ட செயலக அதிசய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில், தொழிற்சங்க பிரமுகர்கள்,தோட்ட முகாமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

பேச்சுவார்த்தையில் 60 சதவீத பிரச்சினைகளுக்கு இணக்கப்பாடு எட்டியதையடுத்து பணி பகிஷ்கரிப்பு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையில் ஹைபொரஸ்ட் தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகளை தொழில் திணைக்களத்திற்கு முன்மொழிந்த பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொது செயலாளருமான வடிவேல் சுரேஸ், சங்கத்தின் நிர்வாக செயலாளர் எஸ். பி.விஜயகுமார் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அத்துடன் இந்தப் பேச்சுவார்த்தையில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணி தலைவருமான வீ.இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட முன்னணி பிரதிநிதிகள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாநில இயக்குநர் எம். இராஜாராம் உள்ளிட்ட மாவட்ட, மாநில பிரதிநிதிகள், இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி சார்பில் பிரதிநிதி பிரான்சிஸ் ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புதிய நிர்வாகிகள் தெரிவு

■ வி.ரி சகாதேவராஜா

காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில் புதிய நிர்வாக சபை தெரிவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, தலைவராக சி. இராமநாதன், செயலாளராக எம். கணேசலிங்கம், பொருளாளராக சோ. சந்திரகாந்தன், உதவி தலைவராக கௌ. தங்கவடிவேல், உதவி செயலாளர் வே. விஜயராசா ஆகியோர் உட்பட, 25 நிர்வாக சபை உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டார்கள். காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிலின் வருடாந்த தீமிதிப்பு உற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகி 24 ஆம் திகதி நிறைவடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது.





மன்னார் விவசாயிகளுக்கு

# பயறு, உளுந்து விதைகள் வழங்கிவைப்பு

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மறு வயல் பயிர் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு பயறு, உளுந்து விதைகள் திங்கட்கிழமை (19) இலவசமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த 140 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு 130 விவசாயிகளுக்கு பயறு விதைகளும் 10 விவசாயிகளுக்கு உளுந்து விதைகளும் உயிலங்குளம் கம நல சேவைகள் நிலையத்தில் வைத்து வைபவ ரீதியாக வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப், மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி வைத்தனர்.

# மேய்ச்சல் தரை பசுமாடுகளையும் கட்டாக்காலி மாடுகளையும் காப்போம்

பல மாகாணங்களில் மாடுகளுக்கு ஒருவகையான அம்மை நோய் பரவுவதை அடுத்து, இறைச்சிக்காக மாடுகளை அறுப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, அந்தந்த மாகாணங்களில் இருந்து வெளி பிரதேசங்களுக்கு மாடுகளை ஏற்றுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாடுகளை களவாக அறுத்து, விற்பனை செய்யும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில், மேய்ச்சலுக்கு விடப்படும் பட்டிமாடுகளை, களவெடுத்துச் சென்று, அறுத்துவிட்டு அதன் உடற்பாகங்களை பொதுவெளியில் வீசிவிட்டுச் செல்லும் சம்பவங்கள் ஏராளம் இட.

கிழக்கை பொறுத்தவரையில், மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகளை கொள்ளையிட்டுச் செல்லுதல், இறைச்சியாக்குதல் ஆகியன அதிகரித்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் காணிகளை அபகரிக்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே, இவ்வாறு கொள்ளையிட்டு, இறைச்சியாக்குவதாக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மாடு வளர்ப்பாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மட்டக்களப்பு, பொலன்னறுவை எல்லை பகுதியிலுள்ள மயிலத்தமடு மாதவனை கால்நடை மேய்ச்சல் பகுதியில் சினை மாடொன்று இறைச்சிக்காக அறுக்கப்பட்டுள்ள சம்பவம் அண்மையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேய்ச்சலுக்கு விடப்பட்டிருந்த மாடு காணாமற்போனதை அடுத்து, அதனை தேடிச்சென்றபோதே, இறைச்சிக்காக அறுக்கப்பட்டமை கண்டறியப்பட்டது.

இந்நிலையில், மலையகத்தில் காடுகளை அண்மித்திருக்கும் பிரதேசங்களில் கட்டாக்காலி எருமைகள் அறுக்கப்பட்டு, இறைச்சியாக விற்பனை செய்யும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. வளர்க்க வசதியில்லாதவர்கள் மாடுகளை கைவிடும் சம்பவங்களும் இங்கு அதிகரித்துள்ளன. அதனையும் இறைச்சிக்காக மாடுகளை அறுக்கும் கும்பல்கள் கடத்திச் சென்று, இறைச்சியாக்கிவிடுகின்றனர். குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் மாடுகள் அறுக்கப்பட்டால். அது பால் உற்பத்தியில் பெரும் தாக்கத்தைச் செலுத்தும். அந்தத் தாக்கம் பாலால் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் இதர பொருட்களின் மீதும் கடுமையான தாக்கத்தை செலுத்தி, உற்பத்தியில் வீழ்ச்சிகண்டு, விலையும் அதிகரித்துவிடும். மாணவர்களுக்கு ஒரு நேரம் பால் வழங்கும் திட்டமெல்லாம் இருந்தன. பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் குறைந்த போஷாக்கு மட்டத்திலேயே இருக்கின்றனர். பால் உற்பத்தி அதிகரிக்குமாயின், அவ்வாறான மாணவர்களுக்கு இலவசமாக ஒருவேளையாவது பசுப்பாலை வழங்கலாம்.

அம்மை நோயால் மாட்டிறைச்சிக்கு ஒருசில பிரதேசங்களில் தடை விதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறான பிரதேசங்களில் மாடுகளையும், மாட்டிறைச்சியையும் ஏற்றிச் செல்லும் கும்பல் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். இதேவேளை, அவ்வாறான கும்பல்களை சேர்ந்தவர்களை கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இறைச்சி வகைகளின் விலைகள் அதிகமாகும். அதற்காக, வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தாது, களவாக வெட்டப்பட்டு விற்பனை செய்யப்படும் மாட்டிறைச்சி தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும். இல்லையேல், நோய்த்தொற்றுக்கு உள்ளாக வேண்டிய நிலைமையே ஏற்படும்.

இந்நிலையில், மிருகங்களைக் கடத்தும் கும்பலிடம் இருந்து, மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகளையும் கட்டாக்காலி எருமைகளையும் காப்பற்றவேண்டியது சகலருடையதும் பொறுப்பாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

குனிந்து, வழிந்து ஒருவரிடம் வேலை செய்வதை விட, சுயதொழில் மூலம் நெஞ்சை நிமிர்த்தி, கருமமாற்றுவது சந்தோசமானது.

சுதந்திரமான வாழ்க்கை இதயத்தை மகிழ்விக்கும். உங்களுக்கு விருப்பமான ஒரு தொழிலைத் தெரிந்தெடுத்து, கற்றுக்கொண்டு வேலைகளை ஆரம்பிக்கவும். கருமங்களைத் தொடங்கியதும் அது கஷ்டமானது என எண்ணலாகாது. பயிற்சிகள் ஒருவரை முழுமையாக்கி விடுகின்றன.

உயர்பதவிக்கு வந்தவர்கள், ஆரம்பகாலத்தில் சிரமப்பட்டே முன்னேறினார்கள். கஷ்டமான வேலைகளையும் இஷ்டத்துடன் செய்தால்த்தான் வெற்றிகளுக்கான வழி தெரியும்.

தொழில்களில் பேதம் இல்லை; நோக்கமே முக்கியமானது. செல்வந்த நாடுகளில் வாழ்பவர்கள், தொழிலில் பேதம் காட்டுவதில்லை.

பெற்றோர் வசதிபடைத்தவர்களாக இருந்தாலும் பிள்ளைகள் சிறுவயதிலேயே தங்கள் செலவுகளுக்காக வீடுகளுக்கு பத்திரிகை கொடுப்பது, நேரம் உள்ள நேரங்களில் கடைகளில் வேலை செய்தும் வருகின்றார்கள்.

இளம் வயதிலேயே அனுபவங்களை உணர்வது, எதிர்காலத்தில் உயர்வு நிலையை உருவாக்கும். தன்னைத்தானே உயர்த்துவது மேன்மை தரும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# மக்களின் உண்மையான பிரச்சினைகள்

மொஹமட் பாதுஷா

நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பாகப் பல மாதங்களாக பேசிக் கொண்டிருக்கின்றோம். சர்வதேச நாணய நிதிய உதவி மற்றும் கடன் மறுசீரமைப்பு முன்னெடுப்புகள் பற்றி தினமும் செய்திகள் வெளியாகின்றன. இலங்கை ரூபாயின் ஏற்ற இறக்கங்கள், பொருட்களில் விலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பற்றியும் பிந்திய தகவல்களைப் பெறுவதில் ஆர்வமாக இருக்கின்றோம்.

இதற்கிடையில் ஜனாதிபதி தேர்தல், மாகாண சபை தேர்தல், இனப்பிரச்சினைக்கான தீர்வு, 13ஆவது திருத்தம் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் என்பன அரசியல் களத்தில் நிரம்பி வழிகின்றன.

காணி ஆக்கிரமிப்பு, தொல்லியல் விவகாரங்களும் பெரும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளாக மாறிக் கொண்டிருக்கின்றன.

பல்லின, பல்சமூக மக்களைக் கொண்ட ஒரு நாடு என்ற வகையிலும், காலவோட்டத்தில் இவை எல்லாம் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் என்ற அடிப்படையிலும் பொருளாதார, சமூக குறிகாட்டிகள், நடைமுறைப் பிரச்சினைகள் குறித்துப் பேசுவது கட்டாயமானதும் தவிர்க்க முடியாததும் ஆகும்.

ஆனால், நாட்டில் வாழ்கின்ற பெரும்பாலான சாதாரண மக்களின் இன்றைய பிரச்சினையும் கவலையும் இவையல்ல. கணிசமான நடுத்தர, கீழ்-நடுத்தர, வறிய மக்களின் இன்றைய கவலை, அவர்களது வாழ்வாதாரம், வாழ்க்கைச் செலவு, குடும்பக் கஷ்டம் என்பன பற்றியதாகும்.

இன்றைய பொழுதை எவ்வாறு கழிக்கப் போகின்றோம்? என்ன கறி வாங்கி சமைக்கப் போகின்றோம்? பிள்ளைகளின் செலவுகளை எவ்வாறு சமாளிக்கப் போகின்றோம்? கடன்களை எவ்வாறு மீளச் செலுத்துவது? மருத்துவச் செலவுகளை எவ்விதம் ஈடுசெய்வது? இம்மாத செலவுகளுக்கான பணத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது போன்ற பல கேள்விகளுடன்தான் அவர்களது பொழுதுகள் விடிகின்றன.

சிங்களவர்களாயினும் தமிழர்களாயினும் முஸ்லிம்களாயினும் இது எல்லோருக்கும், இன்று பொதுவான தலையிடியாகும். அவர்கள் தங்களது வயிறு நிரம்பிய பிறகுதான், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் கவனம் செலுத்துவார்கள் என்பதே யதார்த்தமாகும்.

இதன் அர்த்தம், அவர்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் அக்கறை இல்லாமல் இருக்கின்றார்கள் என்பது அல்ல! மாறாக, அவர்களது சொந்தப் பிரச்சினைகள் தலைக்கு மேலால் போய்க் கொண்டிருக்கின்ற ஒரு காலப்பகுதியில், அரசியல் நெருக்கடி, கடன் மறுசீரமைப்பு, தேர்தல், இனப்பிரச்சினை, அரசியல் யாப்பு பற்றியெல்லாம், நாள் முழுக்க மக்கள் யோசித்துக் கொண்டிருக்க முடியாது.

தேசிய விவகாரங்கள் ஒவ்வோர் இலங்கையருக்கும் அவசியமானவையே. ஆயினும், தமது சொந்தப் பொருளாதரம் பற்றியும், குடும்பத்தின் வயிறு நிரம்புவதற்கு என்ன வழி என்பது பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்கின்ற மக்கள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் தமக்கு நேரம் கிடைக்கும் போது கவனம் செலுத்துபவர்களாகவே இருப்பர் என்பதே நிதர்சனம் ஆகும்.

கொவிட்-19 பெருந்தொற்று பரவலைத் தொடர்ந்து, இலங்கையில் ஏற்பட்ட தேசிய பொருளாதார நெருக்கடியும் வீழ்ச்சியும் இன்னும் சாதாரண மக்களின் வாழ்க்கையுடன் விளையாடிக் கொண்டிருக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் மீட்சி பெறுவதான ஒரு தோற்றப்பாடு ஏற்பட்டாலும் கூட, நிஜத்தில் ஒவ்வொரு குடும்பமும் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளில் பெரிய முன்னேற்றங்கள் ஏற்படவில்லை.

மேல்தட்டு மக்கள், பரம்பரை பணக்காரர்கள், பெரிய முதலாளிகள், வர்த்தகர்கள், அரசியல்வாதிகள், அதிக சம்பளம் பெறுவோர் போன்ற தரப்பினர், தமது குடும்பத்தில் வாழ்வாதார சிக்கலை எதிர்கொள்ளாமல் இருக்கலாம். அவர்களது நிதிப் புரள்வு குறைவடைந்து இருந்தாலும் வாழ்தலுக்கான செலவுகள் குறித்த கவலை அவர்களுக்கு இல்லை. ஆனால், இலங்கையின் மொத்த சனத் தொகையில் இந்த வகுதிக்குள் உள்ளடங்குவோரின் தொகை மிகக் குறைவாகும்.

தற்போது, பொருட்களுக்காக வரிசையில் மக்கள் நின்ற யுகம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஓரளவுக்கு பொருட்கள் சந்தையில் கிடைக்கின்றன. பல பொருட்களுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு இருக்கின்றன. இதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாராட்டவே வேண்டும்.

இந்த முன்னேற்றங்கள் எல்லாம், சாதாரண மக்களின் வாழ்க்கையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதை மறுக்க முடியாது. ஆனால், அது மிகச் சிறியளவானதே. ஏனெனில், ஏற்கெனவே ஏற்பட்ட பாரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்படுத்திய தாக்கங்கள், ஒவ்வொரு குடும்பத்திலும் இன்னும் இருக்கின்றன. மக்களின் வாழ்க்கைச் செலவு, இப்போதும் கட்டுப்படியாகாத நிலையிலேயே இருக்கின்றது.

எரிபொருள், எரிவாயு போன்றவற்றின் விலைகள் குறைக்கப்பட்டு இருந்தாலும் இன்னும் அவை உயர்ந்த மட்டத்திலேயே உள்ளன. இது தவிர அநேகமான அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

அத்துடன், விலை அதிகரிக்கப்பட்ட அளவுக்கு விலைக் குறைப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. விலை குறைக்கப்பட்ட பொருட்களைக் கூட, கிராமப்புறங்களில் அதிக விலைக்கே கொள்வனவு செய்ய வேண்டியிருக்கின்றது.

அத்தியாவசியப் பொருட்கள் என்ற வகைக்குள் உள்ளடங்காத ஆனால், தினமும் பயன்படுத்தப்படுகின்ற பொருட்களின் விலைகள் கணிசமாக அதிகரித்துள்ளன. சவர்க்காரம், சலவைத் தூள், தேயிலை, பால்மா, பிஸ்கட், நூடில்ஸ், கோதுமை மா என, பல்பொருள் அங்காடி ஒன்றில் நாம் வாங்குகின்ற நூறு சதவீதமான பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த விலை அதிகரிப்புகள் பற்றி யாரும் பேசுவது இல்லை. எந்தவித அடிப்படையும் இன்றி, ஒவ்வொரு மாதமும் இவ்வாறான அன்றாடப் பாவனைப் பொருட்களுக்கு இரகசியமாக விலையை உயர்த்துகின்ற பல்தேசியக் கம்பனிகள், பெரிய புள்ளிகளுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் அரச இயந்திரம் எடுப்பதும் இல்லை.

இவை மட்டுமன்றி, மரக்கறிகள், பிரதான கறி வகைகள் தொடங்கி உணவுக்குத் தேவையான அனைத்து பலசரக்குப் பொருட்களின் விலைகளும் நியாயமற்ற வகையில் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. ஆடைகள், அணிகலன்கள், அத்தியாவசியமில்லா பொருட்களுக்கு பன்மடங்கு விலை அதிகரிப்புச் செய்யப்பட்டு இருக்கின்றது.

இதேவேளை, மின்சாரக் கட்டணம், குடிநீர்க்கட்டணம், தொலைபேசிக் கட்டணங்கள், போக்குவரத்து கட்டணங்கள் என சேவைகள் கட்டணங்கள் இரண்டு மடங்கால் உயர்த்தப்பட்டு இருக்கின்றன.

ஓரிரு பொருட்கள், சேவைகளின் விலைகள், கட்டணங்கள் நியாயமான அடிப்படையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கருதினாலும், மீதமுள்ள 90 சதவீதமான பொருட்கள், சேவைகளின் விலைகள் எந்தவித நியாயமும் இன்றி கண்மூடித்தனமாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

பல்தேசிய நிறுவனங்கள் கொள்ளை இலாபம் உழைக்கும் நோக்கில், கண்டமாதிரி விலை அதிகரிப்புகளை மேற்கொள்கின்றன. அவர்கள் அடிக்கின்ற கொள்ளை போதாது என்று, இடைத் தரகர்கள் முதல் உள்ளூரில் கடை வைத்திருக்கும் வியாபாரிகள் வரை கொள்ளை இலாபம் உழைக்கவே முற்படுவதையும் காண முடிகின்றது.

சாதாரண மக்களின் மாதாந்த வருமானம் மாறாமல் இருக்கின்ற நாட்டில் இதுவெல்லாம் நடந்திருப்பதால், மக்களின் கொள்வனவு ஆற்றல் வெகுவாக குறைந்திருக்கின்றது. அரசாங்கம் இதனை கவனத்தில் எடுத்து, வெற்றிகரமாக தீர்த்து வைக்கவில்லை.

நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் ஒட்டுமொத்தமாக ஏற்பட்டுள்ள வீழ்ச்சிதான் ஒவ்வொரு குடும்ப அலகையும் பாதித்துள்ளது. எனவே, தேசிய பொருளாதார குறிகாட்டிகளில் முன்னேற்றத்தைக் கொண்டுவருவதன் ஊடாக, நாட்டின் பொருளாதாரம் முழுமையாக மீட்சி பெறுகின்றபோது, அதன் விளைபயன்களை ஒவ்வொரு பொதுமகனும் அனுபவிக்கலாம்.

“ஆகவே, அதற்கான வேலைத் திட்டங்களையே நாம் இப்போது மேற்கொண்டு வருகின்றோம். காலவோட்டத்தில் ஒவ்வொரு குடும்ப அலகிலும் நெருக்கடிகள் குறைந்து விடும்” என்று அரசாங்கம் கூற முற்படலாம். அதுவும் யதார்த்தமானதே! அவ்வாறான நம்பிக்கையிலேயே ஒவ்வொரு பொதுமகனும் காலத்தை கழித்துக் கொண்டிருக்கின்றான்.

ஆனால், அரசாங்கம் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது, இந்தப் பொருளாதார நெருக்கடி என்பது, நடுத்தர வர்க்கத்துக்கு கீழே உள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் என்றுமில்லாத சிக்கலை தோற்றுவித்துள்ளது. வியாபாரிகள், பணம் படைத்தோர், கொழுத்த சம்பளம் பெறுவோர் மற்றும் வெளிநாடுகளில் உழைப்போரின் குடும்பங்களில் இந்தத் தாக்கம் சற்று குறைவாக இருக்கலாம்.

ஆனால், ஏனைய 75 சதவீதத்துக்கும் அதிகமான மக்களின் வாழ்க்கையில் என்றுமில்லாத நெருக்கடி ஏற்பட்டுள்ளதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. 50-60 ஆயிரத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு வருமானத்தில் தங்கியுள்ள குடும்பங்கள், தனியொருவரில் வருமானத்தில் தங்கியுள்ள பெரிய குடும்பங்கள், ஏற்கெனவே வறுமைப்பட்ட குடும்பங்கள் என இப்பட்டியல் நீள்கின்றது.

இந்தப் பின்னணியில், நாட்டின் கடன் மறுசீரமைப்பு வெற்றிகராமாக நிறைவேற்றப்பட்டு, ரூபாயின் பெறுமதி அதிகரித்து, டொலரின் இருப்பு அதிகரித்து, மொத்த உள்நாட்டு உற்பத்தி உயர்ந்து, சென்மதி நிலுவை பிரச்சினை தீர்ந்து, தேசத்தின் பொருளாதாரம் மீண்ட பிறகுதான், ஒவ்வொரு குடும்பத்தினதும் தனிப்பட்ட பொருளாதாரக் கஷ்டங்கள் தீரும் என்றால் அதற்கு இன்னும் நீண்டகாலம் எடுக்கும்.

எனவே விரைவில், சாதாரண மக்களின் நெருக்கடிகள், கவலைகளுக்கான பரிகாரங்களை வழங்குவதற்கு அரச இயந்திரம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைவிடுத்து, ‘பழம் கனிந்து பாலில் விழும் வரை’அல்லது ‘கடல் வற்றிக் கருவாடு தின்னும் காலம் வரும் வரை’ மக்களைக் காத்திருக்கச் சொல்வதில் எந்த நியாயமும் தர்மமும் இல்லை.

## கடிதங்கள்

### மட்டு. மாவட்டத்தில்

## சிறுபோக வேளாண்மை களைகளால் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை, புதுவித களையால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கொக்கட்டிச்சோலை பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள சிறுபோக. நெற்செய்கையில் விளைந்துள்ள நெற்செய்கைக்கு இடையில் காட்டு வேளாண்மை என்கின்ற கிலிக்கி பயிர்கள் பெரிதாக வளர்ந்து, சிறுபோக நெற்செய்கையை மூடிவிடுவதால் அதாவது, முன்னர் விளைந்த நெற்பயிர்களை மூடிவிடுவதுடன் அவைகள் கீழே விழுந்து முழுநெற் செய்கையையும் அழித்து விடுவதால் விவசாயிகள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த வருடம் பெரும்போகம், சிறுபோகம் பயிர்செய்கைகளின் போது, விவசாயிகள் பசளை, கிருமிநாசினி போன்ற பல பிரச்சினைகளை எதிர்கொண்டு, பெரும் நட்டங்களை எதிர்கொண்டிருந்தார்கள். அப்படி இருக்கையில், ‘பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்’ என்ற பழமொழிபோல, விவசாயிகள் மீண்டும் மீண்டும் பாதிக்கப்படுவதற்குக் காரணமான காரணிகள் அடையாளம் காணப்பட்டு, தீர்வுகள் காணப்பட வேண்டும். இந்தச் செயன்முறைகள் தாமதமில்லாமல் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த களைகளை அகற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரீ.எல் ஜவ்பர்கான்

# ராஷ்மிகாவிடம் மோசடி



தமிழில் கார்த்தியின் 'சுல்தான்' படம் மூலம் அறிமுகமானவர் ராஷ்மிகா மந்தனா. தொடர்ந்து விஜய் ஜோடியாக 'வாரிசு' படத்தில் நடித்தார். தெலுங்கில் பல மொழிகளில் வெளியான 'புஷ்பா' அவருக்கு திருப்புமுனை படமாக அமைந்தது.


ரஷ்மிகா மந்தனா, தற்போது அல்லு அர்ஜுன் நடித்த 'புஷ்பா 2' படத்தில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில், அவரிடம் நீண்ட காலமாக பணிபுரிந்த அவரது மேலாளர் அவரிடம் ரூ.80 இலட்சத்தை ஏமாற்றி விட்டதாக கூறப்படுகிறது.

இதனால் அவர் வேலையில் இருந்து நீக்கப்பட்டு உள்ளார். ஆனால் இந்தச் சம்பவம் குறித்து ராஷ்மிகா இன்னும் அதிகாரப்பூர்வமாக எதுவும் தெரிவிக்கவில்லை.

ஹிந்தி இயக்குநர் சந்தீப் ரெட்டி வங்கா அடுத்ததாக 'அனிமல்' என்ற படத்தை இயக்கி வருகிறார். இந்தப் படத்தின் கதாநாயகனாக பிரபல இந்தி நடிகர் ரன்பீர் கபூர் நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக ராஷ்மிகா மந்தனா நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாடிக் கொண்டிருந்த போதே உயிரிழந்த பாடகர்





அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல ராப் பாடகரான பிக் போக்கி, நேற்று முன்தினம் டெக்சாஸ் மாகாணம் பியூமண்ட் நகரிலுள்ள விடுதி ஒன்றில் பிரபல இசை கச்சேரியில் கலந்து கொண்டதாகவும் அப்போது பாடிக் கொண்டிருந்தபோதே மேடையில் சரிந்து விழுந்து உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.


45 வயதான பிக் போக்கி மேடையில் சரிந்து விழுந்தபோது, முதலுதவி வழங்கப்பட்டும் எந்த முன்னேற்றமும் இல்லாமல் மருத்துவமனையில் அனுமதித்த நிலையில் மருத்துவர்கள் அவர் உயிரிழந்ததாக அறிவித்துள்ளனர். ஆனால், பிக் போக்கி எதனால் உயிரிழந்தார் என்பது குறித்து எந்த விளக்கமும் இதுவரை வெளியாகவில்லை.


இந்தத் தகவல் தற்போது அமெரிக்க இசை ஆர்வலர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஹுஸ்டன் பகுதியைச் பிக் போக்கியின் உண்மையான பெயர் மில்டன் பவல். இவர் ஸ்க்ரூ அப் கிளிக் குழுவில் இணைந்து தனது இசை பணியை ஆரம்பித்தார். தொடர்ந்து, 1999 இல் 'தி ஹார்டெஸ்ட் பிட் இன் தி லிட்டர்' இசை ஆல்பம் மூலம் பிரபலமான இவர், பல்வேறு ஹிட் இசை ஆல்பங்களைக் கொடுத்துள்ளார்.

அண்மையில் 2021 இல் இவருடைய 'சென்செய்' இசை ஆல்பம் பெரிய அளவில் வரவேற்பை பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# சரணடைந்த நடிகை






விஜய் நடித்து 2003இல் வெளியான 'புதிய கீதை' படத்தில் நடித்தவர் அமிஷா பட்டேல். ஹிந்தி, தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார்.

குணால் குருமர் என்பவருடன் இணைந்து அமிஷா பட்டேல் ஹிந்தி படமொன்றை தயாரிக்க முடிவு செய்து அஜய்குமார் சிங் என்பவரிடம் ரூ.2.5 கோடி கடன் பெற்றார். படம் திரைக்கு வரும்போது பணத்தை திருப்பி தந்து விடுவதாகவும் கூறியிருந்தார்.

ஆனால், படம் திட்டமிட்டபடி திரைக்கு வரவில்லை. இதனால் அஜய்குமார் சிங் பணத்தை திருப்பி கேட்டுள்ளார். இதற்காக வட்டியையும் சேர்த்து ரூ.3 கோடிக்கு அமிஷா பட்டேல் செக் கொடுத்துள்ளார்.

அதை வங்கியில் செலுத்தியபோது பணம் இல்லாமல் திரும்பி வந்தது. இதனால் அதிர்ச்சியான அஜய்குமார் ராஞ்சி நீதிமன்றில் அமிஷா பட்டேல் மீது செக் மோசடி வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் அமிஷா பட்டேலுக்கு பல தடவை சம்மன் அனுப்பியும் ஆஜராகாததால் பிடிவாரண்ட் பிறப்பித்தது.

இந்த நிலையில் அமிஷா பட்டேல் நீதிமன்றில் சரண் அடைந்தார். இதையடுத்து அவருக்கு நிபந்தனையுடன் பிணை வழங்கப்பட்டது.



## 'துருவ நட்சத்திரம்'

விக்ரம் நடிப்பில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட 'துருவ நட்சத்திரம்' படத்தை இயக்குநர் கௌதம் மேனன் இயக்கியுள்ளார். கதாநாயகியாக ரீத்துவர்மா நடித்திருக்கிறார். இவர்களுடன் பார்த்திபன், ராதிகா சரத்குமார், சிம்ரன், ஐஸ்வர்யா ராஜேஷ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்தின் பணிகள் 2017ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு வெளிநாடுகளில் முக்கிய காட்சிகள் படமாக்கப்பட்டன. படத்தை 2018இல் திரைக்கு கொண்டு வர திட்டமிட்டிருந்த நிலையில், சில காரணங்களால் தள்ளிப்போனது.

இதையடுத்து அண்மையில் 'விரைவில் ஜான் உங்களை சந்திப்பார்' என்றும் படக்குழு போஸ்டர் ஒன்றை வெளியிட்டு தெரிவித்திருந்தது.

இந்நிலையில் ஹரிஷ் ஜெயராஜ் இசை நிகழ்வில் 'துருவ நட்சத்திரம்' படத்தின் சில விஷயங்களை இயக்குநர் கௌதம் மேனன் பகர்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

அதில், இப்படத்திற்காக 3 பாடல்களை ஹரிஷ் ஜெயராஜ் இசையமைத்து உள்ளதாகவும் பாடல்களை ஜூலை மாதம் வெளியிட திட்டமிட்டுள்ளதாகவும், இதில் வாரணம் ஆயிரத்தில் இடம்பெற்று வரவேற்பை பெற்ற 'அஞ்சல' பாடல் போன்ற ஒரு பாடலை ரசிகர்கள் எதிர்பார்க்கலாம் என்றும் கௌதம் மேனன் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.



# இந்திய படங்களுக்கு அதிரடி தடை



நடிகர் பிரபாஸ் நடிப்பில் வெளியான 'ஆதிபுருஷ்' படம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியானது. எனினும், நேபாள நாட்டில் திரையிட திட்டமிடப்பட்டு இருந்த 'ஆதிபுருஷ்' படத்தின் வசனம் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதுபற்றி நேபாள நாட்டின் காத்மண்டு நகர மேயர் பலேந்திர ஷா வெளியிட்ட பேஸ்புக் பதிவில், 'ஆதிபுருஷ் இந்திய படத்தில், ஒரு வசனம் வருகிறது. அதில், ஜானகி இந்தியாவின் மகள் என தெரிவிக்கின்றது. இது ஆட்சேபனைக்கு உரியது. இதனை சரி செய்ய நாங்கள் 3 நாள்கள் காலஅவகாசம் அளித்து இருக்கிறோம்.நேபாளத்தின் சுதந்திரம், சுயமரியாதையை தக்க வைத்து, தேச நலனை பாதுகாப்பது என்பது ஒவ்வோர் அரசின், அரசு அமைப்பின், அரசு சாரா பிரிவு மற்றும் நேபாள குடிமகனின் முதல் கடமை என்பதில் சந்தேகமே இல்லை' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து, அனைத்து இந்திய படங்களுக்கும் அவர் தடை விதித்துள்ளதுடன், காத்மண்டு நகர பொலிஸாரை திரையரங்கம் முன் குவித்தும் உத்தரவிட்டார்.

அவரது உத்தரவை அடுத்து, பொகாரா நகர மேயரும் உத்தரவு ஒன்றை பிறப்பித்து, நேற்று (19) காலை முதல் அனைத்து பொலிவுட் திரைப்படங்களும் திரையிட தடை விதிக்கப்படுகிறது என அறிவித்து உள்ளார்.

இரு பெருநகர மேயர்களின் உத்தரவுகளை தொடர்ந்து, திட்டமிடப்பட்ட நேரத்தில் திரையிடப்பட இருந்த பொலிவுட் திரைப்படங்கள் இரத்து செய்யப்பட்டன. அவற்றுக்கு பதிலாக ஹொலிவுட் மற்றும் நேபாள படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன.

# சாலை விபத்து; ஓர் உயிர் கொல்லி



சு. திலேஜா
diloodiloo57@gmail.com
ஊடகக்கற்கைகள் துறை
யாழ் பல்கலைக்கழகம்

உலகளாவிய ரீதியில் இன்று மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில் முக்கியமான ஒன்றாக சாலை விபத்து காணப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் வீதி விபத்துக்களால் ஏற்படுகின்ற உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் பொருட்சேதங்களின் அளவும் நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

தினம் தோறும் பத்திரிகைகளிலோ அல்லது இணையதள பக்கங்களிலோ நாம் வாசிக்கும் போது, சாலை விபத்து தொடர்பான அதிகளவு செய்தியை அன்றாடம் பார்க்கக் கூடியதாக உள்ளது. பச்சிளம் பாலகன் முதல் வயோதிபர் வரை சாலை விபத்தில் சிக்கி உயிர் இழக்கின்றனர். இன்று சாலை விபத்தில் உயிரிளப்போரின் எண்ணிக்கையானது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

வாகனங்கள் வாகனங்களுடன் மோதுவதாலும் அல்லது வாகனங்கள் கட்டடங்களுடன் மோதுவதனாலோ இவ்வாறான சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. அதிகரித்த வாகனங்களின் பயன்பாடு, சனத்தொகை அதிகரிப்புமே சாலை விபத்துக்கு பிரதான காரணமாக காணப்படுகின்றது.

சாலை விபத்துகள் ஏற்படுவதற்கு இயற்கையான காரணங்களே அதிகளவு காணப்படுகின்றன. சாலை விபத்துகள் அதிகமாக ஏற்பட காரணம் ஓட்டுநர்களின் கவனக்குறைவாகும். அலைபேசியில் உரையாடிக் கொண்டு வாகனத்தை ஓட்டுவதாலும், நித்திரை தூக்கத்தில் வாகனம் ஓட்டுவதாலும், வாகனங்களின் பாகங்கள் சரியாக உள்ளனவா என்பதை கவனிக்காமல் வாகனம் ஓட்டுவதாலும், வாகனங்களில் செல்லும்போது அதிகளவு சத்தமாக பாட்டு போடுவதாலும், தேவை இல்லாத நேரத்தில் ஒலி எழுப்புவதாலும் இவ்வாறான சாலை விபத்துகள் ஏற்படுகின்றன.

இது தவிர வாகன ஓட்டுநர்கள் ஏனைய வாகனங்களோடு போட்டி போட்டு, வேகக்கட்டுப்பாட்டு வரம்பை மீறி வாகனங்களை ஓட்டுவதாலும் நாளாந்தம் ஏராளமான விபத்துகள் ஏற்படுகின்றன. அது மட்டுமின்றி, சாலையில் தாறுமாறாக வாகனங்களை செலுத்துவதாலும் வீதி விபத்துகள் ஏற்படுகின்றன. அதிகளவு மழை காலங்களில் வேகக் கட்டுப்பாட்டை மீறி வாகனங்களை செலுத்தும் போது, வாகன டயரின் தேய்வு காரணமாக வாகனங்கள் சறுக்கி விபத்துகள் ஏற்பட நேரும்.

அத்தோடு மழைக்காலத்தில் பள்ளங்களில் நீர் தேங்கி இருப்பதால் மேடு, பள்ளம் எனப் பாராது வாகனங்களை ஓட்டுவதால் சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. முறையான சாலை ஒழுங்கு முறைகளை கடைப்பிடிக்காததாலும் குறிப்பாக வீதிச் சமிஞ்சை விளக்குகளை அவதானிக்காமல் போக்குவரத்து செய்வதாலும் சாலை விபத்துகள் ஏற்படுகின்றன.

பெருநகரப் பிரதேசங்களில் சாலை விபத்து என்பது பாரியதொரு பிரச்சினையாகவும் சவாலாகவும் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. இவ்வாறு பெருநகரப் பகுதிகளில் சாலை விபத்து ஏற்பட காரணம், புதிய சாலைகள் காணப்படுவது அதிகளவு சன நெரிசலும் இதற்குக் காரணமாகின்றது. இவ்வாறான சாலை விபத்து, அதிகமான உயிர்களை காவு கொண்டு செல்கிறது.

வாகனங்களை செலுத்தும் போது, குறிப்பாக மோட்டார் சைக்கிளை செலுத்தும் போது தலைக்கவசம் அணியாது செல்வதாலும் விபத்து ஏற்படும் போது உயிர் மாய்ந்து போகின்ற சம்பவங்கள் பலவும் காணப்படுகின்றன. இவற்றோடு புதிய வாகனங்களை அனுபவம் அற்றவர்கள் இயக்கும் சூழ்நிலைகளில், கையாளத் தெரியாததாலும் சாலை விபத்துகள் இடம்பெற நேரிடுகின்றது.

சாலை விபத்துகள் இவ்வாறு ஏற்படுவதை நாம் எவ்வாறு தவிர்க்கலாம் என நோக்கும் போது, முதலில் தரைவழிப்பாதைகள் முறையாக அமைக்கப்பட வேண்டும். அத்தோடு வீதியில் காணப்படும் இறந்த விலங்குகளின் உடல்கள் மற்றும் தேவையற்ற பொருட்கள் இருப்பின் அவற்றை உடனடியாக அகற்ற வேண்டும். வாகனங்களை ஓட்டும் ஓட்டுநர்கள் கவனமாக வாகனத்தை செலுத்த வேண்டும். வாகனத்தை செலுத்தும் போது மதுபாவனை, அலைபேசி என்பவற்றை பயன்படுத்தக் கூடாது. வாகனங்கள் வேகமாக ஓடுவதையும் தவிர்க்க வேண்டும்.

குறிப்பாக, வாகனங்களின் வேக கட்டுப்பாட்டை குறைப்பதால் 35 சதவீதம் வீதி விபத்துகளை குறைவடையச் செய்யலாம் என வழக்கறிஞர் ஏ.எஸ். பிலாஸ் கூறுகின்றார். வாகனத்தை செலுத்த ஆரம்பிக்கும் போது, வாகன ஓட்டுநர்கள் வாகனங்களின் பாகங்கள் சரியாக செயற்படுகின்றனவா என அவதானித்த பின்னரே வாகனங்களை இயக்க வேண்டும்.

வாகனங்களை செலுத்தும் போது, வீதி விதிமுறைகளை சரியாக கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு முறையாக கடைப்பிடிக்காத பட்சத்தில் வீதி விதிகளை மீறி செயற்படுவோருக்கு கடுமையான தண்டனையையும் வழங்க வேண்டும். இவ்வாறு மக்கள் செயற்படுவதன் மூலம் வீதி விபத்துகளை குறைக்கலாம்.

சாலை விபத்து ஏற்படுவதை ஒருவர் கண்காணித்துக் கொண்டு நிற்கின்றார் எனின், அவர் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்வதன் மூலம் சாலை விபத்துகள் மூலம் ஏற்படும் உயிரிழப்புகளை தவிர்த்துக் கொள்ளலாம். குறிப்பாக சாலையில் விபத்து ஏற்படுவதை நீங்கள் அவதானித்தால், அந்தப் பாதையில் வரும் ஏனைய வாகனங்களுக்கு ஏதோ ஒரு வகையில் உடனடியாக எச்சரிக்கை வழங்க வேண்டும்.

அத்தோடு சாலை விபத்து நடந்த இடத்தைப் பற்றிய முழு தகவலையும் உடனடியாக பொலிஸாருக்கும் அருகில் உள்ள மருத்துவமனைக்கும் தெரிவிக்க வேண்டும். அது மட்டுமின்றி, விபத்துக்கு உள்ளாகியவரை எந்த நிலையிலும் தனியே விட்டுவிட்டுச் செல்லாது, அவருடன் இருந்து அவருக்குரிய முதலுதவிகளைச் செய்ய வேண்டும். இதன் மூலம் சாலை விபத்தால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்க முடியும். இவ்வாறு, சாலை விபத்து ஏற்படும்போது நாம் ஒவ்வொருவரும் மேற்குறிப்பிட்டவைாறு செயற்படுவோமானால் ஒவ்வோர் உயிரையும் காப்பாற்ற முடியும்.

சாலையில் விபத்து ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் எனில், வீதி விதிகளை நாம் ஒவ்வொருவரும் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். அந்த வகையில், வீதி விதிகளை கடைபிடிக்கும் போது சாலை விபத்துகளை தடுக்க முடியும். இவ்வாறான வீதி விதிமுறைகளை பார்க்கும்போது, வாகனத்தை செலுத்தும் போது அலைபேசி பாவிக்க கூடாது; மது அருந்திவிட்டு வாகனத்தை இயக்கக் கூடாது; வீதி சமிக்கைகள் மற்றும் வேக கட்டுப்பாட்டை கவனத்தில் கொள்ள வேண்டும்; நான்கு சக்கர வாகனத்தில் பயணம் செய்யும் ஓட்டுநர் வார்ப்பட்டை (seat belt) அணிய வேண்டும்; இரண்டு சக்கர வாகனத்தில் செல்வோர் தலைக்கவசம் அணிந்து செல்ல வேண்டும்; பாதசாரிகள் மஞ்சக் கோட்டு கடவையால் வீதியைக் கடக்க வேண்டும்; 18 வயதுக்கு குறைந்தோர் வாகனங்களை ஓட்டக்கூடாது; வாகனங்களை ஓட்டும்போது போக்குவரத்து சைகைகளை சரியாக கடைபிடிக்க வேண்டும். இது போன்ற வீதி விதிமுறைகளை கடைபிடிக்கும் போது சாலை விபத்துகளில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

சாலை பாதுகாப்பில் உள்ள முக்கிய விதிகளையும் வாகன ஓட்டுநர்கள் சரியாக தெரிந்து வைத்திருக்க வேண்டும். இதன் மூலமும் சாலை விபத்துகளை தவிர்க்க முடியும். குறிப்பாக வாகனங்களை ஓட்டுநர்கள் சாலையின் இடது பக்கத்தில் செலுத்த வேண்டும்; வாகனங்களை முந்திச் செல்வதை தவிர்த்தல், பாதசாரி கடவைகளுக்கு முன் வாகனத்தின் வேகத்தை குறைத்தல், தீயணைப்பு வாகனம், அவசர ஊர்தி, வண்டி போன்றவற்றுக்கு வழி விடுதல், வாகனம் 'U' எனத் திருப்பும் அடையாளம் உள்ள இடத்தில் மட்டும் வாகனங்களை திருப்புதல், வலது பக்கமாகவோ அல்லது இடது பக்கமாகவோ வாகனத்தை செலுத்தும் போது சைகை காட்டுதல், வாகன ஓட்டுநர் தேவையில்லாமல் ஒலிப்பானை பயன்படுத்தக் கூடாது என இதுபோன்ற சாலை பாதுகாப்பை கடைபிடிப்பதன் மூலம், சாலை விபத்தை தவிர்த்து, விபத்துகளில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

சாலை விபத்து பற்றிய விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் மேற்கொள்ளும் விழிப்புணர்வு தகவல்களை மக்கள் அறிந்து, அதற்கு ஏற்ப செயற்படுவதால் சாலை விபத்துகளை தவிர்க்க முடியும். உதாரணமாக, நீண்ட தூரம் வாகனங்களை தொடர்ந்து செலுத்துவதை தவிர்த்தல், எதிரே வரும் வாகனத்திற்கு ஏற்ற வகையில் நாம் வாகனத்தை செலுத்தல், வாகன அனுமதி பத்திரத்தின் முக்கியத்துவத்தை மக்கள் மத்தியில் பரப்புதல், வாகனங்கள் போட்டிக்கு செல்வதால் ஏற்படும் தீமைகளை மக்களுக்கு எடுத்து இயம்புதல் போன்ற விழிப்புணர்வு தகவலை மக்களுக்கு வழங்குவதால் சாலை விபத்துகள் ஏற்படுவதனை எம்மால் தவிர்க்க முடியும்.

மனிதர்களாகிய நாம் அனைவரும் சிந்தித்து, ஒன்றிணைந்து ஒற்றுமையாக செயற்படுவோமாக இருந்தால், இவ்வாறான சாலை விபத்துகளால் ஏற்படுகின்ற உயிர் இழப்புகளையும் பொருட் சேதங்களையும் இயன்றளவு குறைத்துக் கொள்ள முடியும்.




## பழைய மாணவிகள் சத்தியப்பிரமாணம்

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய பழைய மாணவிகள் சங்க பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் வெள்ளிக்கிழமை (16) அதிபர் என். சஹறாப்தீன் தலைமையில் நடைபெற்றது.
அதிபர் தலைமையிலான பழைய மாணவிகள் சங்கத்துக்கு செயலாளராக எம்.எஸ்.எப் முப்லிஹா (ஆசிரியை), உபசெயலாளராக எம்.எப் அப்ரின், பொருளாளராக ஐ.எப் இஸ்மத் ஆகியோரோடு 11 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
இந்நிகழ்வின்போது, தெரிவு செய்யப்பட்ட பழைய மாணவிகள் பாடசாலையின் வளர்ச்சிக்கு தங்களால் முடிந்த பங்களிப்புகளை வழங்குவோம் என்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

எச்.எம்.எம் பர்ஸான்

## பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவிகளுக்கு மடிக்கணினிகள்

பதுளை மலையக சிறுவர் இல்லத்திலிருந்து கல்வி கற்று, பல்கலைக்கழக அனுமதி பெற்று, பேராதனை பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்குத் தெரிவாகியுள்ள இரு மாணவிகளுக்கு, யாழ். செல்வச் சன்னதியின் சன்னிதியான் ஆச்சிரம சுவாமி மோகனதாஸ் மற்றும் மலையக இல்ல ஸ்தாபகர் ஆர்.எம் கிருஸ்ணசாமி ஆகியோர் மடிக் கணினிகளை நேற்று (19) பதுளை மலையக சிறுவர் இல்லத்தில் வைத்து வழங்கினர்.
பதுளை மலையக இல்ல பொறுப்பாளர் கே. காண்டீபன், இணைப்பாளர் கே. பாமினி ஆகியோரும் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

எம். செல்வராஜா



## கிளிநொச்சி மக்கள் வங்கியால் இரத்த தானம்




கிளிநொச்சி மக்கள் வங்கியின் 62 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, அதன் ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட இரத்த வங்கிக்கு இரத்த தானம் வழங்கும் நிகழ்வு, சனிக்கிழமை (17) வங்கி அலுவலகத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருமான மருத்துவர் த. சத்தியமூர்த்தி, கிளிநொச்சி மக்கள் வங்கி கிளையின் முகாமையாளர் பிரதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மு. தமிழ்ச்செல்வன்



## சிறுவனின் வெற்றியை கொண்டாடும் வாகனப்பேரணி

உலக வரைபடத்தில் உள்ள 195 நாடுகளின் அமைவிடங்களை அடையாளம் காட்டி, அவற்றின் பெயர்களையும் தலைநகரங்களையும் நான்கு நிமிடங்கள் 16 நொடிகளுக்குள் கூறியதை, 'பன்னாட்டுச் சோழன் உலக சாதனை புத்தக நிறுவனம்' முறைப்படி பரிசோதித்து, உலக சாதனையாக அங்கிகாரம் வழங்கியதை அடுத்து, கே. ஹர்ஷித்தின் வெற்றியை கொண்டாடும் நோக்கில், வாகனப்பேரணி ஞாயிற்றுக்கிழமை (18) நுவரெலியா பிரதான நகரில் முன்னெடுக்கப்பட்டது.
நுவரெலியா – உடபுசல்லா பிரதான வீதியில் ஆரம்பித்து, நுவரெலியா பிரதான வீதி வழியாக குயின் எலிசபெத், கண்டி பிரதான வீதி, பழையகடை வீதி போன்ற வீதிகளினுடாக சென்று பேரணி நிறைவு பெற்றது.

செ. திவாகரன்

## 'குளிருக்கு அழுத மழை'




காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் ஏற்பாடு செய்த கவிக்கோன் இல்மி அஹமட்லெப்பை எழுதிய 'குளிருக்கு அழுத மழை' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா, காத்தான்குடி மத்திய கல்லூரி மண்டபத்தில், கழகத்தின் தலைவர் 'கவிமாமணி' ரீ.எல் ஜவ்பர்கான் தலைமையில் நடைபெற்றது.
இந்த வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக ஓமான் நாட்டு முன்னாள் தூதுவர் அமீர் அஜ்வத்தும் கௌரவ அதிதிகளாக தென்கிழக்கு பல்கலைகழக முகாமைத்துவ துறை துணைத் தலைவர் பேராசிரியர் எம். முஸ்தபா, மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சீ.ஏ அஸீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரி பிரதி அதிபர் கவிஞர் எம்.நௌசாத், நூல் நயவுரை வழங்கினார்.

ரீ.எல் ஜவ்பர்கான்

## டயகம புனித அந்தோனியார் தேவாலய திருவிழா



டயகம புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழா, 'ஒரே குடும்பம், ஓர் அவை, ஒரே மறைப்பணி' எனும் தொனிப்பொருளின் கொண்டாடப்பட்டது.
கண்டி மறை மாவட்ட குரு முதல்வர் அதிவணக்கத்துக்குரிய எல்வின் பீட்டர் பெர்னாண்டோ தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருவிழாவில், ஏராளமான பொதுமக்கள் இன, மத வேறுபாடின்றி கலந்து சிறப்பித்தனர்.
புனித அந்தோனியாரின் திருவுருவ சிலை, டயகம நகர் முழுவதும் பவனியாக கொண்டு செல்லப்பட்டு, ஆசீர்வாதம் ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு, புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா இனிது நிறைவு பெற்றது.

நீலமேகம் பிரசாந்த்






## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

வன்னி ஹோப் – அவுஸ்திரேலியா நிறுவனத்தின் ஏற்பாட்டில், கேகாலை மாவட்டத்தில் வரக்காப்பொல பிரதேசத்தில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (18) வரக்காப்பொல ஆர்.ஜே வரவேட்பு மண்டபத்தில் சமூக ஆர்வலர் சாந்தா மரியால் குணதீபன் தலைமையில் நடைபெற்றது.
அம்பேபுஸ்ஸ தமிழ் வித்தியாலயம், பனான தமிழ் வித்தியாலயம், தஸ்னாவ தமிழ் வித்தியாலயம், மாதெனிய தமிழ் வித்தியாலயம், நியந்துருபொல தமிழ் வித்தியாலயம் ஆகிய ஐந்து பின்தங்கிய பாடசாலையைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர்களான என். முரளீதரன், எம்.ரீ.எம் பாரீஸ், விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

வ. சக்தி

## சேனையூர் நாகம்மாள் கோவிலில் வழிபாடு




திருகோணமலை மாவட்டத்தின் கட்டைப்பறிச்சான் வடக்கு பகுதியில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க சேனையூர் அருள் மிகு ஶ்ரீ நாகம்மாள் கோவிலில் நேற்று முன்தினம் (18) இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் யதுகுலசிங்கம் அனிருத்னன் வழிபாட்டில் ஈடுபட்டார்.

அ. அச்சுதன்

## வெற்றியாளருக்கு காசோலை



அபிவிருத்தி லொத்தர் சபையின் லொத்தர்கள் மூலம், வடக்கில் உருவான வெற்றியாளர்களுக்கும் முகவர்களுக்கும் காசோலை வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில், யாழ். மாவட்ட செயலாளர் அ. சிவபாலசுந்தரன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் நேற்று (19) நடைபெற்றது.
யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட விற்பனை மேம்படுத்தல் அதிகாரி ம. தவகோகுலன் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற நிகழ்வில், அபிவிருத்தி லொத்தர் சபையின் கிளிநொச்சி, வவுனியா மாவட்ட விற்பனை மேம்படுத்தல் அதிகாரி கே. பிரதீபனும் பங்குபற்றினர்.

நிதர்சன் வினோத்





## கடமையேற்பும் கௌரவிப்பும்

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் பதில் செயலாளராக, பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) பதவி வகித்த ஏ. மன்சூரும், கிழக்கு மாகாண முதலமைச்சின் பதில் செயலாளராக, உள்ளூராட்சி ஆணையாளராக பதவி வகித்த நாகராசா மணிவண்ணனும் தங்களின் கடமைகளை நேற்று (19) பொறுப்பேற்றுக்கொண்டனர்.
கிழக்கு மாகாண முதலமைச்சின் பதில் செயலாளராக கடமைப் பொறுப்பேற்ற உள்ளூராட்சி ஆணையாளர் நாகராசா மணிவண்ணனை, அம்பாறை மாவட்ட உதவி ஆணையாளர் உள்ளிட்ட அலுவலர்கள் வாழ்த்தி, பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

அபு அலா




## அறநெறிப் பாடசாலை சீருடைக்கு காசோலை

திருகோணமலை, அலஸ்தோட்டம் நாகம்மாள் அறநெறிப் பாடசாலை மாணவருக்குச் சீருடை வழங்கும் பொருட்டு, திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் 2,30,000 ரூபாய் நன்கொடையாக வழங்கப்பட்டது.
திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன், இதற்கான காசோலையை மேற்படி அறநெறிப் பாடசாலையின் தலைவர் சுந்தரலிங்கத்திடம் வழங்கி வைத்தார்.
குச்சவெளியைச் சேர்ந்த திருச்செல்வம் பிரபாகரன் நினைவாக, இதற்கான அனுசரணை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அ. அச்சுதன்





ஆந்திரா

## தவறான ஊசி செலுத்தப்பட்ட 100 நாய்கள் மரணம்

இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் நாய்களுக்கு தவறான ஊசி செலுத்தப்பட்ட நிலையில் 100ற்கும் மேற்பட்ட நாய்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம் பல நாடு மாவட்டம் முப்பல்லா கிராமத்தில் தெரு நாய்கள் அதிக அளவில் உள்ளன. இந்த நாய்களால் கிராம மக்கள் கடுமையாக



பாதிக்கப்பட்டனர். இதற்கு தீர்வு காண கோரி பொதுமக்கள் கலெக்டரிடம் மனு அளித்தனர்.

நாய் தொல்லையை தடுக்க கலெக்டர் உத்தரவிட்டார்.

போதிய விழிப்புணர்வு இல்லாததால் இந்த நாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசிக்கு பதிலாக தவறான ஊசி போட்டதாக கூறப்படுகிறது. இதனையடுத்து பணியில் அலட்சியம் காட்டியதாக கிராம பஞ்சாயத்து செயலாளர் ஹேமாவதி பணிநிறுத்தப்பட்டார். மேலும் 3 அதிகாரிகளுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பி உள்ளனர்.

இந்தியா

## கற்கச் சென்ற மாணவனுக்கு 9 வருடகால சிறைத்தண்டனை

இங்கிலாந்தில் கல்வி கற்ற இந்திய மாணவர் ஒருவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் ஒன்பது வருடகால சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

குறித்த மாணவன் இங்கிலாந்தில் இடம்பெற்ற விருந்து நிகழ்வொன்றில் கலந்துகொண்டுள்ளார். அதன்போது விருந்தில் கலந்துகொண்ட யுவதி ஒருவரை



பாலியல் பலாத்காரம் செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

20 வயதுடைய இளைஞன் குடிபோதையில் காணப்பட்ட குறித்த பெண்ணை, தனது அறைக்கு தூக்கிச்சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

போதைதெளிந்து சுயநினைவு வந்ததன் பின்னர் குறித்த பெண் பொலிஸாரிடம் முறைப்பாடினை முன்வைத்தன் அடிப்படையில் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேபாளம்

## 80 வயதில் பிளஸ் 2 தேர்வு எழுதவுள்ள பாட்டி

நேபாளத்தில் கையில் ஊன்று கோல் துணையுடன் நடத்துவரும் 80 வயது மூதாட்டி தனது 12 ஆம் வகுப்பு தேர்வை எழுதவுள்ளார்.

நேபாளத்தின் ராமேச்சாப் பகுதியை சேர்ந்த ரத்னகுமாரி என்ற மூதாட்டியே இவ்வாறு தேர்வு எழுதவுள்ளார்.

தனது சிறுவயதில் விவசாயம் செய்வதற்கே நேரம் சரியாக இருந்ததாகவும் அப்போது தன்னால்



கல்வியை தொடர முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது தனக்கு மீண்டும் படிப்பதற்கான எண்ணம் தோன்றியதாகவும் அதனால் முதியோர்களுக்கான வகுப்பில் தான் சென்று படித்துவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று பகுதியில் 10 ஆம் வகுப்புக்கான பரீட்சையை எழுதியதாகவும் தற்போது 12ஆம் வகுப்பு தேர்வை எழுதுவதாகவும் தெரிவித்துள்ளார்.

“கல்விக்கு வயது ஒரு தடை இல்லை” எனவும் மூதாட்டி மேலும் தெரிவித்துள்ளார்.

உக்ரேன்

## உக்ரேனுக்கு உதவ ஐ.நா நடவடிக்கை; மாஸ்கோ நிராகரிப்பு

உக்ரேனில் ரஸ்யா ஆக்கிரமித்த பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு உதவி செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை முன்வந்துள்ள நிலையில், மொஸ்கோ அதனை நிராகரித்துள்ளது.

வெள்ளம், வீடுகள் மற்றும் விவசாய நிலங்களை அழித்தது. ஆயிரக்கணக்கான மக்களை வெளியேற்ற வேண்டிய கட்டாயம்



ஏற்பட்டது. அசுத்தமான குடிநீர் விநியோகம் மற்றும் சுற்றுச்சூழல் பேரழிவு பற்றிய அச்சமும் மக்கள் மத்தியில் தோன்றியது.

பாதிக்கப்பட்டவர்கள் எங்கிருந்தாலும், அவசரமாக உயிர்காக்கும் உதவி, தேவைப்படும் அனைத்து மக்களையும் சென்றடைய ஐக்கிய நாடுகள் சபை, தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும் என்று உக்ரைனுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான ஒருங்கிணைப்பாளர் டெனிஸ் பிரவுன் தெரிவித்துள்ளமை குறிப்பிடதக்கது.

இங்கிலாந்து

## கத்திக்குத்துக்கு இலக்காகிய நபர் பலி

இங்கிலாந்தில் கத்திக்குத்துக்கு உள்ளான இளைஞன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் தென்கிழக்கு இலண்டனில் பணியாற்றி வந்த குறித்த நபர் மூன்று பேருடன் தங்கி வந்துள்ளார். இந்தநிலையில் கேரளாவை சேர்ந்த ஒருவரும் அவருடன்




தங்கி வந்துள்ளார். குறித்த கேரள இளைஞனால் குறித்த நபர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இருவருக்கும் ஏற்பட்ட தகராறில் கத்திக்குத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து

## இரகசிய சுற்றிவளைப்பில் ஈடுபட்ட இங்கிலாந்து பிரதமர்

இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக், இங்கிலாந்து பிரதமரானது முதல் சட்டவிரோத குடியேற்றத்தை ஒழிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றார்.

இந்நிலையில், தற்போது புல்லட் புரூப் ஆடையுடன் களத்தில் இறங்கிய பிரதமர் ரிஷி சுனக், அமலாக்கத்துறை அதிகாரிகளுடன் சட்ட



விரோதமாக குடியேறியவர்களை தேடி கைதுசெய்தார்.

அதிகாலையில் அதிகாரிகளுடன் புறப்பட்ட ரிஷி சுனக் ஹோட்டல்கள், மதுபான விடுதிகள், சலூன்கள், வணிக வளாகங்கள் என அனைத்து இடங்களிலும் அலசி ஆராய்ந்தார்.

இந்தத் தேடுதல் வேட்டையில் சட்ட விரோதமாக குடியேறிய சுமார் 20 நாடுகளை சேர்ந்த 105 பேர் கைது செய்யப்பட்டனர். இதனை டுவிட்டரில் பகிர்ந்துள்ளார்.

பிரேசில்

## சூறாவளியில் சிக்கி 20 பேர் பலி

பிரேஸிலில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக 20 பேர் உயிரிழந்துள்ள நிலையில், காணாமல் போனவர்கள் ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தில் சிக்கிய 3,713 பேர் பத்திரமாக மீட்க்கப்பட்டுள்ளனர்.

20-க்கும் மேற்பட்டவர்களை வெள்ளம் அடித்து சென்றது. அவர்கள் ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்பட்டனர்.

அத்துடன் காணாமல் போனவர்களை தேடும் பணி நடந்து வருகிறது. ஆயிரக்கணக்கானவர்கள் தமது வீடுகளை இழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் அங்குள்ள விளையாட்டு மைதானங்களில்



தற்காலிமாக தங்க வைக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசங்களுக்கான லீக் தொடர்: சம்பியனான ஸ்பெய்ன்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரில் ஸ்பெய்ன் சம்பியனானது.

நெதர்லாந்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற குரோஷியாவுடனான இறுதிப் போட்டியில் வென்றே ஸ்பெய்ன் சம்பியனாயிருந்தது.

போட்டியின் வழமையான நேரம், மேலதிக நேரம் எதுவிலும் கோலெதுவும் பெறப்படாத நிலையில் 5-4 என்ற ரீதியில் வென்றே ஸ்பெய்ன் சம்பியனாயிருந்தது.

ஸ்பெய்ன் சார்பாக ஜொசெலு, றொட்றி, மிகேல் மெரினோ, மார்கோ அஸென்ஸியோ ஆகியோர் தமது பெனால்டிகளை உட்செலுத்திய நிலையில், அய்மரிக் லபோர்ட்டேயின் பெனால்டியானது கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பியிருந்தது. குரோஷியாவில் நிகொலா விளாசிச், மார்செலோ பிரஸ்னோவிச், லூகா மோட்ரிச், இவான் பெரிசிச் ஆகியோர் தமது பெனால்டிகளை உட்செலுத்திய நிலையில் லொவ்ரோ மஜேரின் பெனால்டியானது ஸ்பெய்ன் கோல்




காப்பாளர் உனய் சிமோனால் தடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குரோஷியாவின் புரூனோ பெற்கோவிச் பெனால்டியையும் சிமோன் தடுக்க, ஸ்பெய்னின் டனி கர்வகால் தனது பெனால்டியை உட்செலுத்த 5-4 என்ற ரீதியில் ஸ்பெய்ன் சம்பியனாயிருந்தது.

இதேவேளை மூன்றாமிடத்துக்கான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வென்ற இத்தாலி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. இத்தாலி சார்பாக, பெடெரிக்கோ டிமார்கோ, டாவிடே பிரட்டேசி, பெடெரிக்கோ சியெஸ்கா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். நெதர்லாந்து சார்பாக, ஸ்டீவன் பேர்ஜ்வைன், ஜோர்ஜினோ விஜ்னால்டும் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடர்:

## கிங்ஸ்வூட்டை வீழ்த்திய இசிப்பத்தன

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கிங்ஸ்வூட் கல்லூரியுடனான போட்டியில் 32-08 என்ற புள்ளிகள் கணக்கில் நடப்புச் சம்பியன்களான இசிப்பத்தன கல்லூரி வென்றது.

இசிப்பத்தன சார்பாக, சமத் இரோஷன் இரண்டு ட்ரைகளையும், நவீன் கனிஷ்க, கெனுல மிஹிசர, ஷாகிட் ஸும்ரி ஆகியோர் தலா ஒவ்வொரு ட்ரையையும் பெற்றனர். றினேஷ் சில்வா இரண்டு கொன்வேர்ஷன்களுக்கான புள்ளிகளைப் பெற்றதோடு, ஒரு பெனால்டிகளுக்கான புள்ளிகளையும் பெற்றிருந்தார். கிங்ஸ்வூட் சார்பாக தரிந்து இஷார ஒரு ட்ரையைப் பெற்றதோடு, இமங்க இஷார ஒரு பெனால்டிக்கான புள்ளிகளைப் பெற்றிருந்தார்.

## ஆப்கானிஸ்தான் குழாமுக்கு திரும்பிய ரஷீட் கான்




பங்களாதேஷுக்கெதிரான ஒற்றை டெஸ்டில் ஆப்கானிஸ்தானின் ரஷீட் கானுக்கு ஓய்வளிக்கப்பட்டிருந்த நிலையில், ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமில் அவர் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, நூர் அஹ்மட் குழாமில் இடம்பெறவில்லை.

மேலதிக வீரர்கள் பட்டியலில் கரிம் ஜனட், குல்படின் நைப், நவீன்-உல்-ஹக், குவைஸ் அஹ்மட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.


குழாம்: ஹஷ்மத்துல்லாஹ் ஷகிடி (அணித்தலைவர்), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ், இப்ராஹிம் ஸட்ரான், முஜீப் உர் ரஹ்மான், மொஹமட் சலீம், நஜிபுல்லாஹ் ஸட்ரான், அஸ்மதுல்லாஹ் ஒமர்ஸாய், மொஹமட் நபி, இக்ரம் அலிஹில், ரஹீட் கான், றியாஸ் ஹஸன், பஸல்ஹக் பரூக்கி, அப்துல் ரஹ்மான், ஷகிடுல்லாஹ், ஸியா-உர்-ரஹ்மான், வஃபடார் மொமன்ட், ரஹ்மட் ஷா, சயீட் ஷிர்ஸாட், இஸ்ஹருல்ஹக் நவீட்.

## ஸெபக்தக்ரோ இலங்கை தேசிய அணியில் புத்தளத்திலிருந்து ஐவர்

எம்.யூ.எம். சனூன்

தாய்லாந்தில் அடுத்த மாதம் ஆறாம் திகதி முதல் 19ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 36ஆவது கிங்ஸ் கப் 2023 ஸெபக்தக்ரோ உலகக் கிண்ணத்துக்கான சம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொள்ளும் இலங்கை தேசிய ஸெபக்தக்ரோ அணியின் ஆண்கள் பிரிவின் 12 வீரர்களில் ஐவர் புத்தளத்தை பிரதிநிதிப்படுத்தியுள்ளனர்.

புத்தளம் ஸெபக்தக்ரோ விளையாட்டுக் கழகத்தின்




வீரர்களான எச்.ஏ. சகீ அஹமட், அதீப் ஹஸன், அஸ்ஹார் ஹுஸைன், எச்.எம். ஹஸாம் அஹமட், ஆர்.எம். ஆதிப் ஆகியோரே தேசிய அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். இவ்வீரர்களில் சகீ அஹமட், அதீப் ஹஸன், அஸ்ஹார் ஹுஸைன் ஆகிய மூவரும் கடந்தாண்டு பங்களாதேஷில் நடைபெற்ற நான்காம் தெற்காசிய ஸெபக்தக்ரோ சுற்றுப் போட்டியில் இலங்கை அணியில் விளையாடியிருந்தனர்.

## கிரிக்கெட் போட்டியில் சட்டத்தரணிகள் அணி வெற்றி






நிதர்சன் வினோத்

வடக்கு மாகாணத்தில் வைத்தியர்களுக்கும் சட்டத்தரணிகளுக்கும் இடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சட்டத்தரணிகள் அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது வருடமாக நடாத்தப்பட்ட இந்தப் போட்டி சனிக்கிழமை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 35 ஓவர்கள் கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வைத்தியர்கள் அணி 34.4 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களை எடுத்தது.

227 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சட்டத்தரணிகள் அணி, 22.3 ஓவரில் மூன்று விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த கிரிக்கெட் போட்டி யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தால் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டது.

கடந்த வருடம், முதல் தடவையாக நடாத்தப்பட்ட போட்டியிலும் சட்டத்தரணிகள் அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. போட்டியில் விருந்தினர்களாக நீதிபதிகள், வைத்திய நிபுணர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 20 ஜூன் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.